சுதந்திரச்சங்கு

வாரப் பதிப்பு

டாக்டர் உ. வே. சா

மயில் இறகு வேண்டுமா?

காணுமற்போன தம்பி

—வ. ரா.

ஆனந்த லஹரி

காந்தியின் குற்றம்

—கி. ஐ. ர.

அமாவாசை காத்திருக்குமா?

புத்தகம் 4. வையாசி மீ 5உ (18-5-34) வெள்ளி இதழ் 25.

பண்டிதரே

பண்டிதரே—பழய பண்டிதர் புதிய பண்டிதர் இரண்டு பெயருக்கும் தான் இந்த அழைப்பு. தமிழைப் பற்றித் தாங்கள் ரொம்பக் கவலைப்படுகிறீர்கள். தமிழினிடம் தங்களுக்குப் பூரணமான அன்பு உண்டு. ஆனால், தாலி கட்டிய கணவன் மாதிரிப் பாத்தியம் கொண்டாட வேண்டாம் என்றால், கேட்க மாட்டேனென்கிறீர்களே; அதுதான் பலருக்குத் தங்களிடம் எரிச்சலை உண்டாக்குகிறது.

தமிழ் யாருக்கும் ஏகபோக உரிமைப் பண்டமல்ல. அது தமிழர் யாவருடையவும் பொது உடைமை என்பதைத் தாங்கள் நினைவில் வைக்க வேண்டும். தாயின் வயிற்றில் பிறந்தது முதல் தமிழிலே கேட்டு, தமிழிலே பேசி, தமிழிலே நினைத்து வளர்ந்த அத்தனை பேருக்கும் தமிழ் சொந்தம். தங்கள் வீட்டுப் புத்தக அலமாரிக்குள்ளேதான் இருக்கிறது தமிழ் என்று தாங்கள் நினைத்தால், அது தவறு. அங்காடிக்காரத் தங்கத்துக்குத் தமிழில் பாத்தியமில்லை யென்றால், அவள் பச்சை மிளகாய் கொத்தமல்லி விற்க முடியாது. தமிழுக்கு அந்தப்புர வாழ்க்கை கிடையாது. வீதியெல்லாம் தமிழ், வீடெல்லாம் தமிழ்.

தங்கள் தமிழ் நூல்கள் தான் என்னவென்று நினைத்திருக்கிறீர்கள்? எங்கோ காட்டில் பிடித்து, வந்த சிங்கம், புலி, கரடி என்று நினைத்திருக்கிறீர்களா? கூண்டை விட்டு வெளியே விடக் கூடாது என்று அஞ்சாதீர்கள். நீங்கள் ஸர்க்கஸ் வேடிக்கை செய்வதற்காகத்தான் தமிழ் என்ற வஸ்துப் படைக்கப் பட்டிருக்கிற தென்பது தவறான மனோ பாவம். தமிழ் உங்களைக் கேட்டுக்கொண்டு ஜனிக்கவில்லை; உங்களைக் கேட்டுக் கொண்டு வாழப் போவதில்லை. தமிழில் மற்றவர்களைப் போல உங்களுக்கும் பாத்தியமுண்டு. அவ்வளவுதானே யொழிய, ஏகபோக உரிமை கொண்டாட வேண்டாம்.

கம்பன் சொல்லியிருக்கிறான், சேக்கிழார் சொல்லுகிறார் என்று சதா சர்வதாத் தியானம் செய்து கொண்டிருக்கிறீர்களே. கம்பனும் சேக்கிழாரும் பெரியவர்களா யிருக்கலாம். அதற்கென்ன? தங்க மயமான பவுன் பெரிய நாணயம்தான். செப்புக்காசுகளை அதற்காகச் சமுத்திரத்தில் கொண்டு போய்க் கொட்டிவிட முடியாது. பெரிய மனிதர்கள் பச்சை நோட்டுகளாகவும், ஆயிர ரூபாய் உண்டியல்களாகவும் செலாவணி செய்து கொண் டிருக்கலாம். எல்லாராலும் அப்படி முடியுமா? தம்படி, காலணா, அரையணாக்களை வரவு செலவு செய்து கொண்டு, வாழ்க்கையைச் சந்தோஷமாய்க் கழிக்க வேண்டிய ஏழைகளும் இருக்கிறார்களே. இல்லையா?

நீங்கள் கம்ப ராமாயணத்தையும், சேக்கிழாரையும் படித்துக் கொண்டிருங்கள். அயோத்தியிலிருந்து புறப்பட்ட ராமன் இலங்கை போய் அரக்கனிடம் நடத்திய யுத்தத்தைப் பற்றியே தாங்கள் அநவரதமும் கவலை கொண்டிருங்கள். வேண்டாமென்று சொல்லவில்லை. இப்போது உலகத்தில் என்னென்னவோ நடந்து கொண்டிருக்கின்றனவே. இவற்றைப்பற்றியெல்லாம் அறிய வேண்டுமென்று அநேகருக்கு ஆசையா யிருக்கிறது. ராம ராவண யுத்தத்தோடு உலகத்தின் கதை முடிந்து விடவில்லை. பண்டிதர் கதை பூர்த்தியாகி விடலாம். ஆனால், உலகத்தின் கதை ரொம்ப ரொம்ப நீளமானது. மனித வருக்கம் வாழ வாழ உலகத்தின் கதை நீளநீளப் போய்க்கொண் டிருக்கிறது. ராம ராவண யுத்தம்போல் அவ்வளவு ருசியில்லா திருக்கலாம். ஆனாலும், இதோ இருக்கிறதே உலகம்; அதிலிருக்கும் நாமும், அதுவும் இயங்கிக் கொண்டே யிருக்கிறோமே. போனதைப் பற்றிப் பேசுவோம். ஆனால், நடப்பதற்கு உயிர் கொடுக்கும் பேச்சு. அப்படியில்லாவிட்டால், போனதை மறந்து விடுவதுகூட மேலா யிருக்கும் என்றுதான் தோன்றுகிறது.

ஒரு சின்ன விஷயம் இ'த்'தன்னா, இ'ட்'டன்னாவுக்காகத் தாங்கள் ரொம்பத் தகராறு செய்கிறீர்கள். 'ர'கர 'ற'கர மயக்கங்களுக்காக மிகவும் விவகாரம் செய்கிறீர்கள். அச்சுக் கோப்பவன் பிசகுக்குக்கூடத் தாங்கள் போராட வேண்டுமோ? அகராதி வாங்கி வைத்துக் கொள்ளுவதில் சிரத்தை யில்லாத சோம்பேறித்தனத்தால் ஏற்படக்கூடிய குற்றங்களுக்கெல்லாம் தாங்கள் வம்பு செய்யலாமா? ஒரு இ'த்'தன்னா விட்டுப் போனால், நீங்கள்தான் அதைத் திருத்திப் போட்டுக் கொண்டால் என்ன மோசம்? திருத்தக்கூட வேண்டாம், கொஞ்சம் அழுத்தி உச்சரித்துப் படித்து விட்டீர்களானால், சரியாய்ப் போய் விடுகிறது.

மறுபடியும் பண்டிதரே, தமிழ் கோயிலிலுள்ள மூல விக்கிரகமல்ல. முன்னே போய் நின்று ஸ்தோத்திரம் பாடிவிட்டு, வீட்டுக்கு வந்து சேர்வதற்காக அல்ல தமிழ். தமிழ் வாழ்க்கையிலே பயன்படுவதற்கு. எண்ண அலைகளை எழுப்புவதற்குத் தமிழ். கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளுவதற்குத் தமிழ். ஒருவருக்கொருவர் உள்ள உறவுகளை வளர்த்துப் பலப்படுத்திக் கொள்ளுவதற்குரிய கருவி தமிழ். தமிழினுடைய சக்தியை யெல்லாம் திரட்டிப் போஷித்து வளர்த்துப் பயன்படுத்துவது தமிழ். பண்டிதரே, தாங்களும் இதற்கு உதவிசெய்ய லாகாதா?

—தி. ஜ. ர.

சுதந்திரச்சங்கு

"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லாமெடுத் தோதுவோமே"

போன் நெ. 8088

ஆசிரியர்: சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

Vol. IV.] வைகாசிமீ 5உ வெள்ளிக்கிழமை (18—5—1934) [No. 25

மயில் இறகு வேண்டுமா?

உல்லாசமாய்த் தோகையை விரித்துத்தான் மயில் ஆடும். நாம் ஆனந்தப்படும்படி நர்த்தனம் செய்கிறதே, இந்த அழகான பட்சியைத் தொல்லை செய்யலாமா என்று நினைத்தால், மயில் இறகுக்கு ஆசைப்படக் கூடாது. "மயிலே, மயிலே, ஒரு இறகு போடேன்" என்றால், அது போடாது. இருத்தி வைத்துத்தான் பிடுங்கவேண்டும். இது பழமொழியான பேச்சு. ஆனால், மனிதனது மனோ தர்மத்தைப் பற்றித்தான் இதைச் சொல்லுவது வழக்கம். காட்டில் ஆடும் தோகை மயிலைவிட, மனிதனது மனக்குரங்கு சுலபத்தில் வசப்படாதது.

பிரிட்டிஷ் சர்க்கார் என்ற மயில் தோகை விரித்து ஆடிக்கொண்டிருக்கிறது. இன்றல்ல. நேற்றல்ல; ரொம்ப நாளாகத்தான் ஆடிக் கொண்டிருக்கிறது. சுயராஜ்யம் என்ற இறகை அதுவாகப் போட்டு விடும்போல் இன்னும்கூடச் சிலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆசை வெட்கமறியுமா? ஆட்டத்தால் நம்மைக் களிப்படையச் செய்யும் மயில், இறகுந்தான் போடும் என்பது அவர்களுடைய எண்ணம். எண்ணம் என்பதைவிட ஆசை அல்லது கனவு என்றுகூடச் சொல்லலாம்.

பாஷை தெரியாத பாட்டுக்கு அபிநயம் பிடிக்கும் இடத்தில், அவனவன் தன் தனக்கு எட்டிய அல்லது பிடித்தமான அர்த்தத்தைச் செய்து கொள்ளுவது சர்வ சகஜம்; அது அவர்களுக்குச் சந்தோஷமும்தான் தருகிறது. ஆனால், நாட்டியக் காரியின் மனம் வேறே. 'தாதி மனம் நீர்க் குடத்தே தான்' என்பது போல உள்ளுக்குள் ஒளிரும் மனோ பாவத்தை நாம் சுலபத்தில் விளங்கிக்கொள்ள முடியாது. வைசிராய் வில்லிங்டன் பிரபு லண்டன் போவதைப்பற்றிப் பல யூகங்கள் பறக்கின்றனவே, இவற்றால் நாம் மயங்கிவிடலாகாது. சர்க்கார் அபிநய நர்த்தனங்களின் மனோ பாவத்தை நாம் எப்படி நிர்ணயிப்பது?

நடக்கப் போவதைப் பற்றி நிர்ணயிப்பதற்கு நடந்தவைதான் உதவியாயிருக்கும். வில்லிங்டன் பிரபு லண்டனுக்குப் பிரயாணமாகிறார். லண்டன் போய்ச் சேர்வதற்குமுன் மூன்று வாரங்கள் ஐரோப்பாவில் தங்குவாராம். பிறகு லண்டன். அங்கே என்ன செய்யப் போகிறார், ஐயா? வில்லிங்டன் விஜயத்தின் ரகசியம் என்ன? ஏறக்குறைய 'தேசீய-மிதவாதிகள்' கோரிக்கை திருப்திப் படும்படி, வெள்ளை அறிக்கையைத் திருத்த முயற்சிப்பாராம். இந்தியாவின் அரசியல் அமைப்பைத் தயாரிக்க, தேர்தல்மூலம் அமைந்த பிரதிநிதி சபை ஒன்றை அமைக்க வேண்டுமென்று சுயராஜ்யக் கட்சியார் சொல்லுகிறார்களல்லவா? இதைப் பற்றியும் இந்தியா மந்திரியோடு யோசிப்பாராம். இதெல்லாம் பத்திரிகை யூகங்கள்.

வெள்ளை யறிக்கைத் திட்டத்தைக் குழி தோண்டிப் புதைக்க எல்லாத் தேசீய வாதிகளும் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும்போது, அதை நயப்படுத்த விரும்பும் அதே வில்லிங்டன் துரை மகனார், சுயராஜ்யக் கட்சியின் பிரதிநிதி சபை யோசனையைப் பற்றியும் ஆலோசனை புரிவார் என்பது முன்னுக்குப் பின் விரோதமாகும். அது நிஜம்; இது அழுந் தெரிவதற்காகக் கிளப்பிவிட்ட வதந்தி.

வில்லிங்டன் ஆட்சியைப் பற்றி ஆரம்ப முதல் சரியாகக் கவனித்தவர்களுக்கு, இந்தியாவின் அபிலாஷையை எவ்வளவு தூரம் பூர்த்தி செய்ய உண்மையாய் அவர் முயற்சி செய்வார் என்பது நன்றாய்த் தெரியும். இந்தியாவுக்கு வந்தவுடனே இவர் கூறிய அவை யடக்கப் பேச்சு நமக்கு நன்றாய் ஞாபகமிருக்கிறது. "நான் கிழவன். ராஜ்ய பாரச் சுமையை நான் தாங்க மாட்டேன். கானடாவைப் போல ஏறக்குறையக் குடியேற்ற நாட்டந்தஸ்தைப் பெற்று, பொறுப்புள்ள மந்திரிகள் என் பாரத்தை வாங்கிக் கொள்ளுவார்கள்" என்பதாக இவர் சொன்னார். "அதற்கு வேண்டிய முயற்சிகள்தான் அன்றுமுதல் இன்றுவரை நடந்திருக்கின்றன" என்று இந்த வில்லிங்டன் தமது மார்பில் கையை வைத்துச் சொல்ல முடியுமா?

இப்பொழுது லண்டனுக்குப் போகிறார் இந்த வில்லிங்டன் பிரபு. அங்கே அவருக்கு எத்தனையோ காரியங்களிருக்கும். அங்கே அவருக்கு வீடிருக்கிறது, வாசல் இருக்கிறது; போற்றிப் புகழ்ந்து பாடத் தோழர்களுமிருப்பார்கள். இந்தியாவுக்குச் சுயராஜ்ய விக்ரகத்தைத் தயாரிப்பதற்குத்தான் போகிறார் என்று நாம் நினைக்க முடியுமா? அந்தக் கதையையெல்லாம் நாம் நம்பிக்கொண்டிருந்தால், நமது காரியம் ஆகாது. அதையெல்லாம் கவனியாமல் நமது காரிய முண்டு, நாமுண்டு என்று அலுவல் புரியவேண்டும். மயிலிறகு வேண்டுமானால், ஆட்டங்களில் ஆனந்தித்துக் கொண்டிருக்கலாமோ? நிர்ப்பந்தமும் அவசியமும் ஏற்பட்டாலன்றி, மனிதர்கள், அதிலும் சொகுசாய் அதிகாரம் செலுத்திக் கொண்டிருக்கும் மனிதர்கள், அசைய மாட்டார்கள். வில்லிங்டன் க்ஷேமமாய், மங்களகரமாய், லண்டன் போய் வரட்டும். அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. அதைக் குறித்துத் திரிக்கப்படும் கயிறுகளை யாரும் நம்பவேண்டியதில்லை என்பதுதான் நமது எச்சரிக்கை.

நெருங்கினல் ஓட்டம்

ஒரு காலத்தில் காங்கிரஸ்காரர் வட்டமேஜை கூட்டலாம் என்றார்கள் ; அப்பொழுது பிரிட்டிஷ் சர்க்கார் சம்மதிக்கவில்லை. ஏனெனில், பிரிட்டிஷ் சர்க்கார் ராஜதந்திரிகளைக் கொண்டு அமைந்ததல்லவா? காங்கிரஸ் சொல்லுவதை எப்படித் தடை சொல்லாமல் ஏற்பது என்று அவர்கள் அர்த்தமில்லாமல் திகிலடைந்தார்கள். பின்னால், வட்ட மேஜையைத் தாங்களாகவே கூட்ட நேரிட்டது. காலகரணத்தாலும், பிரிட்டிஷ் ராஜதந்திரிகளின் அசட்டு நடை முறைகளாலும் வட்டமேஜைகள் பயனற்றுப் போயின.

என்றாலும், அவர்கள் தங்கள் நடைமுறைகளுக்கு இந்திய மக்களில் மிகப் பெரும்பாலோருடைய ஆதரவு இருப்பதாகப் பெருமை யடித்துக் கொள்வதில் மாத்திரம் குறைவில்லை. அது நிஜமானால், ஒரு புதிய யோசனைக்கு அவர்கள் உட்பட்டாக வேண்டும். சுயராஜ்ஜியக் கட்சியார் அதை இப்பொழுது சொல்லுகிறார்கள். இந்தியாவுக்குச் சுயநிர்ணய உரிமை உண்டு. "இந்தியாவில் ஒரு தேர்தல் நடத்துங்கள் ; அதனால் ஒரு சபை ஏற்படட்டும் ; அந்தப் பிரதிநிதி சபையைக் கொண்டு இந்தியாவுக்கு வேண்டிய அரசியல் அமைப்போம்" என்றுதான் இவர்கள் கூறுகிறார்கள்.

பிரிட்டனில் தற்கால ஆசிரியர்களுக்குள்ளும், கல்விமான்களுக்குள்ளும் தலைசிறந்த பெர்ட்டிராண்டு ரஸ்ஸல், ஹெரால்டு லாஸ்கி முதலியவரடங்கிய பலர் இந்த யோசனையை ஆதரித்து ஒரு அறிக்கை தயாரித்திருக்கிறார்கள். பிரிட்டிஷ் சர்க்காருக்கு நீதி உணர்ச்சி இருக்குமானால், இந்தியாவிலுள்ள பெரும்பாலான ஜனங்களுடைய ஆதரவு தங்களுக்கே கிடைக்குமென்ற தைரியமிருக்குமானால், அப்படிக் கிடைக்கும் ஆதரவை யனுசரித்தே காரியம் செய்ய வேண்டுமென்ற ஆவல் இருக்குமானால், பசப்பும் பகட்டும் மாய்மாலமும் கூடாதென்ற எண்ணமிருந்தால், இந்த யோசனைக்குச் சந்தோஷத்தோடு இணங்கித் தீர வேண்டும். கிட்ட நெருங்கினல் ஓட்டம் கூடாது. காலதாமதம் செய்தால், இந்த வழியும் போய் மிக மிகக் கசக்கும் வேறு முறைக்கு ஒப்புக் கொள்ள நேரிட்டாலும் நேரிடலாம்.

குடையைக் கண்டு மருளும் மாட்டைப் போல, இந்த யோசனையைக் கண்டு பிரிட்டிஷ் சர்க்கார் வெறித்தோட வேண்டியதில்லை. ஆஸ்திரேலியாவில் முன்னே பிரிட்டிஷ் சர்க்கார் இதே முறையைத்தான் அனுசரித்தது. இந்தியா விஷயத்திலும் ஏன் அதை அனுசரிக்கலாகாது? மனமிருந்தால் இடமுண்டு.

எரிகிற வீட்டில் பிடுங்கினது லாபம்

'தாடி பற்றி எரியும் போது பீடிக்கு நெருப்புக் கேட்ட'வன் கதை எல்லோருக்கும் தெரியும். ஆனால் கனந்தங்கிய, கருணை மிகுந்த சர்க்கார் அவர்கள் இப்பழமொழிக்கு இலக்காக நடந்து கொள்ள மாட்டார்கள் என்று தானே நீங்கள் நினைக்கிறீர்கள். அது தான் இல்லை. பூகம்பக் கொடுமையால் பீகார் மாகாண வாசிகள் வீடு, காடு, வயல், தோட்டம், தோப்பு, துறவு, உற்றார், உறவினர், சொத்து, சுதந்திரம் யாவும் இழந்து தெருவில் நின்று திண்டாடும் இந்தப் பரம சங்கடமான நிலையில் அரசாங்கத்தார் வரி வசூல் செய்யக் கிளம்பியிருக்கிறார்கள். இந்த வசூல் கொடுமையைப் பற்றி அழாத குறையாய் ராஜேந்திர பாபு வருத்தம் தெரிவிக்கிறார். ஜனங்களுக்காக அரசாங்கமா? அரசாங்கத்திற்காக ஜனங்களா? ஜனங்களின் கஷ்டத்தைத் தீர்க்காத அரசாங்கத்தால் பயனென்ன? 'வெந்த புண்ணில் வேலை நுழைப்பதுபோல்' முன்னமேயே நொந்து போயிருக்கும் பீகார் வாசிகளிடம் 'எரிகிற வீட்டில் பிடுங்கினது லாபம்' என்ற முறையில் அரசாங்கமோ, ஜமீனோ வரி வசூல் செய்வதைக் காட்டிலும் கொடுமை வேறொன்றுமில்லை. கடவுளுக்குக் கண்ணில்லை என்பர். அரசாங்கத்திற்குக் கருத்துங்கூட இருப்பதாகத் தெரியவில்லையே. இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்திலாவது அரசாங்கம் சிறிது தயாளத்தோடு நடந்து கொள்ளக்கூடாதா?

ஒட்டாவா உபத்திரவம்

இதுவரையில் இந்தியாவுக்கும் இத்தாலிக்கும் வியாபார சம்பந்தம் வெகு திருப்திகரமாய் இருந்தது. நம்முடைய ஏற்றுமதிகள் இறக்குமதிகளைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாய் இருந்தன. ஆனால் ஒட்டாவா ஒப்பந்தப்படி பிரிட்டிஷல்லாத சாமான்களுக்கு அதிக வரி போட்டுவிட்டதால் இத்தாலிக்காரர் கோபங் கொண்டுள்ளனர்.

'இந்தியா நம் நாட்டிலிருந்து பெற்றுக் கொள்ளும் பண்படுத்தப்பட்ட சாமான்களின் விலையைப் போல் இரண்டு மடங்கு தொகைக்கு எண்ணெய் வித்துக்கள், சணல், பஞ்சு, ரப்பர் முதலானவைகளை நம் நாட்டிற்கு ஏற்றுமதி செய்கின்றது. இந்த நிலை முடிவடைய வேண்டும்' என்று முசோலினி தீர்மானித்திருப்பதாக 'டெய்லி டெலிகிராப்' கூறுகிறது. ஆகவே ஒட்டாவா ஒப்பந்தத்தால் நமக்குக் கிடைத்த பயன் இதுதான். நம் நாட்டு வியாபாரத்தைக் குழி தோண்டிப் புதைப்பதற்கு இதைக் காட்டிலும் என்ன வேண்டும்? நிற்க, இன்னொரு வேடிக்கை. அயர்லாந்திலும், ஆப்கானிஸ்தானத்திலும் நம்முடைய வியாபாரத்தைப் பெருக்குவதற்காக ஒப்பந்த முயற்சிகள் நடந்து வருவதாய்த் தெரிகிறது. 'நல்ல நாளிலேயே நாழிப் பால்' என்றபடி சாதாரணமாகவே ஷெ தேசங்களுக்கும், நமக்கும் வியாபாரம் மிகவும் மந்தமானது. அதை விருத்தி செய்வதும் பரம கஷ்டமான காரியம். அப்படியிருக்கப் 'பூசனிக்காய் போவது தெரியாமல் கடுகு போவதைக் கணக்கிடுவது போல்' இத்தாலி வியாபாரத்தை இழப்பதைப் பற்றிக் கவலைப்படாமல் அயர்லாந்து, ஆப்கன் சண்டைக்காய் வியாபாரத்தைப் பற்றி மண்டையை உடைத்துக் கொள்வதில் பயனென்ன? தெய்வந்தான் கேட்கவேண்டும் !

உயிரை விட்டேனும் ஊழியம் செய்வோர்

“பிரிட்டிஷ் சிப்பாய்கள் இந்தியாவுக்கு வந்தவுடன் தங்களுடைய சவப் பெட்டிகளுக்கு ஆர்டர் செய்துவிடுகின்றனர். இதன் செலவு அவர்களது சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது” என்று ஓர் பிரிட்டிஷ் பத்திரிகை கூறுகிறது. இதன் பொருள் என்ன தெரியுமா? “என்னுடைய தாய் நாட்டிற்காக, அதாவது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்காக நான் சேவை செய்வதில் உயிரையும் விடத் தயாராயிருக்கிறேன்” என்று பிரிட்டிஷ் சோல்ஜர் உறுதி கூறுகிறான். நம் நாட்டில் இத்தகைய உறுதியோடு தேச சேவை செய்ய எவ்வளவு பேர் தயாராயிருக்கிறார்களோ, அவ்வளவுக்கு சுயராஜ்ய லக்ஷ்மியும் நம்மிடையில் தாண்டவ மாடுவாள். நம்மவர்கள் எத்தனை பேர்கள் ‘வந்தே மாதரம் என்றுயிர் போயினும் வாழ்த்துவோம் முடி தாழ்த்துவோம்’ என்று உள்ளும் புறமும் ஒன்றாய் உரைக்கத் தயாராயிருக்கின்றனர்?

அமாவாசை காத்திருக்குமா?

டெல்லியில் ஒரு பொருளாதார மகாநாடு நடந்ததே, அது உங்களுக்குத் தெரியுமா? அரசாங்கத்தாரும் அம்மகாநாட்டின் முடிவைப் பற்றி அறிக்கை மேல் அறிக்கை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பத்திரிகை இதனை ‘இன்னும் இரண்டு வெள்ளையர்களுக்கு வேலை’ என்று வர்ணிக்கிறது. ஏதோ விவசாயச் சர்வே முதலான விமர்சனங்களைச் செய்யப் போவதாகவும், அதற்காகக் கமிஷன்கள் ஏற்படுத்துவதாகவும் தெரிகிறது. ரொம்ப சரி. ஆனால் ‘இப்பவோ பின்னையோ இன்னுஞ் சற்று நேரத்திலோ’ என்று, சோற்றுக்கின்றி உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கும் ஏழை இந்தியனிடம் “உன் உடலைப் பரீட்சைச் செய்யப் போகிறேன். அதற்கு இரண்டு வருஷமாவது பிடிக்கும். அது வரையில் பொறுத்துக் கொண்டிரு. அப்புறம் உனக்கு மருந்து தருகிறேன்” என்பது எவ்வளவு நியாயமோ, அவ்வளவு நியாயம் பொருளாதார மகாநாட்டின் முடிவும். ‘ஐயர் வரும் வரையில் அமாவாசை காத்திருக்குமா?’

அவசர சொர்க்கம்

“10 வருஷம் முன்னதாக சொர்க்கத்துக்குப் போவதைவிட 10 நிமிஷம் பூலோகத்தில் தாமதமாய் நடக்கலாம்” என்றார் ஒரு மாஜிஸ்திரேட். வேகமாக மோட்டார் ஓட்டிய ஒரு மோட்டார் டிரைவருக்குத் தண்டனை விதிக்கும் போது இந்த உபதேசத்தைச் செய்தார். தாம் சொர்க்கத்துக்குப் பத்து வருஷம் முன்னதாய்ப் போவதாயிருந்தால்தானே டிரைவர்களுக்குப் பயம். யாரையாவது அனுப்பிவிடலாம் என்ற பரோபகார சிந்தையால், கண்கால் தெரியாமல் அவர்கள் வண்டியோட்டுகிறார்கள். இந்த மாஜிஸ்திரேட்டின் உபதேசம் அவர்கள் செவியில் ஏறுமா?

தமிழ் நாடே!

காந்தியடிகளின் வேண்டுகோளின்படி நாகபுரி சர்வ கலாசாலையார் ஹரிஜன் மாணவர்களிடம் பரிக்ஷைப் பணம் வசூலிக்கவில்லை. இந்தத் தருமத்தைப் பின்பற்றி டெல்லி, காசி, ஆந்திரம் முதலான சர்வ கலாசாலைகளும் ஹரிஜன மாணவர்களுக்குப் பரிக்ஷை வரியை நீக்கி விட்டனவாம். பின்னிரண்டும் பரம ஏழைகளுக்குத் தான் இவ்விதி என்று போட்டிருக்கிறதாம். எப்படியாயினும் பொதுவாக ஏழைகளாகவே இருக்கும் ஹரிஜனங்களுக்கு இது ஓர் பேருதவியேயாகும். இவ்வுதவியைச் செய்யத் தமிழ்நாடும் முன் வருமா? சென்னை சர்வ கலாசாலையும், அண்ணாமலை சர்வ கலாசாலையும் யாது செய்யப் போகின்றன?

ஒருவரும் இல்லையா?

கிழக்கிந்திய ரயில்வேக் கம்பெனியின் பழைய ஏஜெண்ட் ஸர். ஹக்ஹேன்னேக்குப் பதிலாக மற்றொரு வெள்ளையர் இப்போது ஏஜெண்டாக நியமிக்கப்பட்டுள்ளார். இதில் நமக்கொரு சின்ன சந்தேகம். வெள்ளை ரத்த ஓட்டம் மட்டுந்தான் ரயில் வண்டியின் ஓட்டத்திற்கு லாயக்கானதா? நாம் வந்திருக்கும் புது உத்தியோகஸ்தரின் திறமையைப் பற்றிக் குறை கூறவில்லை. அவர் உண்மையிலேயே மிகவும் சாமர்த்தியசாலியாயிருக்கலாம். ஆனால் இந்தியாவில் ரயில் வண்டிகள் ஏற்பட்ட நாள் முதற்கொண்டு கறுப்பு மனிதர்களில் ஒருவராவது இவ்வேலைக்கு லாயக்கானவர்கள் கிடைக்கவில்லையா?

வசிஷ்டர் வாக்கால் பிர்மரிஷி

ரொம்ப நாளைக்கு முன் தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் பாரதியாருக்குப் பாட்டெழுத வேண்டாமென்றும், வசனத்தில் கட்டுரை எழுதி அனுப்பினால் போதுமென்றும் தாக்கீது போட்டனவாம். பாரதியார் மிகவும் வருத்தமுற்றாராம். ஆனால் திடீரெனக் ‘கஸின்ஸ்’ என்னும் ஆங்கிலேயர் அவருடைய பாட்டுகளை மிகவும் மதித்து, சிலவற்றை மொழிபெயர்த்தாராம். அப்பொழுதுதான் பாரதியார் பாடலுக்கு சுக்ரதசை பிறந்தது என்று சொல்வர்.

உலகம் போற்றும் ஆசியா தேசத்து முடிசூடாக் கவியரசர் தாகூர், சமீபத்தில் லங்கை இந்தியன் வியாபாரிகள் சங்கத்தில் தம்முடைய சொந்த நாட்டவர்களைக் காட்டிலும், மேல் நாட்டார் தமது பாடல்களை மிகவும் அதிகமாகப் போற்றுவதாகச் சொல்லி வருத்தப்பட்டார். ‘வசிஷ்டர் வாயால் பிர்மரிஷி’ என்பதுபோல் மேல் நாட்டாரால் போற்றப்பட்டு, நோபல் பரிசு வெகுமதியும் பெற்ற தாகூருக்கே இந்தியாவில் இந்த கதி என்றால் மற்ற இந்தியக் கவிராயர்கள் பாடு எப்படியிருக்கும் என்பதை நாம் சொல்லவா வேண்டும்? ஐயோ! இந்தியாவே நீ என்றுதான் உன்னுடைய கவிஞர்களையும், கலைஞர்களையும் போற்றுவாயோ?

இவ்விடத்தில் இன்னொரு விஷயம் நினைவுக்கு வருகிறது. நமது தமிழ் நாட்டின் நிலையிருக்கிறதே! அதைப் போல மோசம் வேறொன்றுமில்லை. ஒரு சி.வி. இராமன், ஒரு ராதாகிருஷ்ணன் முதலிய மேதாவிகள் நம் நாட்டவராயினும், வங்காளந்தான் அவர்களை உலக மேடைக்குத் தூக்கிவிட்டது. ஒரு பாரதியார், ஒரு பி. ஆர். ராஜம் அய்யர் முதலிய பெரிய எழுத்தாளர்களைத் தமிழ்நாடு பட்டினி போட்டுக் கொன்றுவிட்டது. ஐயோ! தமிழ் நாடே இன்னுமா உனக்குக் கலை உணர்ச்சி உண்டாகவில்லை.

இவைகள் யாவும் நமது அடிமைப் புத்தியின் கோளாறு அல்லாமல் வேறில்லை.

கதரையே கட்டுங்கள்

காந்தியின் குற்றம்

(தி. ஜ. ர.)

பிறர்மேல் குற்றம் கண்டு பிடிப்பது மிகவும் சுலபமான காரியம். சிவபெருமான் மீதே நக்கீரன் குற்றங் கண்டு பிடித்த கதை நமக்கெல்லாருக்கும் தெரியாதா? குற்றங்கண்டு பிடிப்பதற்குப் பிரமாதமான முன் முஸ்தீப்புகள் தேவையில்லை. பொருளைப் பிறன் சேகரம் செய்து, 'இதைச் செலவழி' என்று சொல்லி நம்மிடம் கொடுத்தால், அதில் நமக்கென்ன கஷ்டம்? யாரோ எதையோ செய்கிறான்; நாற்காலியிலோ, அது கிடைக்காவிட்டால் திண்ணைத் தூண் மீதோ சாய்ந்து கொண்டு, அதைப்பற்றி வம்பளந்து நகைப்பதில் என்ன சிரமம் இருக்கிறது? காந்தியின் மீதும் அநேகர் ஒரு குற்றம் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

* * *

நீளம், அகலம், உயரம் என்ற மூன்றும் இல்லாவிட்டால், எந்தச் சாமானும் கிடையாது. காலம் இல்லாமல் போனாலும் அப்படித்தான் என்று புதிய விஞ்ஞான சாஸ்திரிகள் கூறுகிறார்கள். எந்தக் காரியத்துக்கும்கூட இந்தமாதிரி பல அளவுகள் உண்டு. அது தெரியாமல் பேசுகிறவர்களுக்கு எதுவும் விளங்காது. 'கொக்குக்கு ஒன்றே மதி' என்று பேசிக் கொண்டிருக்கலாம். அந்தப் பேச்சினால் பிரயோசனம் மாத்திரம் கிடையாது. உபயோகமற்ற பேச்சுப் பேசுபவர்களுக்குக் காந்தியாயிருந்தால்தான் என்ன? அவர் மீதும் ஒரு குற்றம் சுமத்துகிறார்கள். மேலோடியாகப் பார்ப்போருக்கு அது சரிபோல் தோன்றும்.

* * *

காந்தி, சாஸ்திரங்களைப் பிரமாணமாக, பெரும்பாலும் சொல்லுகிறார். சாஸ்திரங்களுடன் மாறுபட வேண்டி வந்தால், தைரியமாய் மாறுபடத் தயங்குவதில்லை. "இது எப்படிச் சரியாகும்? இது குற்றம் அல்லவா?" என்று சொல்லுவோர் இருக்கிறார்கள். சாஸ்திரங்களை எந்தக் காரணத்தினால் காந்தி பிரமாணமாகக் கொள்ளுகிறாரோ அதே காரணத்தினாலேயே, அதே சாஸ்திரங்களின் சில அம்சங்களைத் தள்ளியும் விடுகிறார். இது விநோதமாகத் தோன்றும். கூட்டலும் கழித்தலும் ஒன்றுதான் என்றால் நம்ப முடியவில்லை. ஆனால், உயர்தர கணிதத்தில் கூட்டலும் கழித்தலும் ஒரே விடையைத் தருவதுண்டு.

* * *

சாஸ்திரங்களும் மேற்கோள்களும் எதற்காக? அவற்றின் தன்மை என்ன? சாஸ்திரங்களுக்கும் இந்த உலகத்துக்கும் சம்பந்தமில்லை என்றால், இந்த உலகத்தில் வாழும் மனிதருக்கு அந்தச் சாஸ்திரங்களால் எவ்விதப் பயனுமில்லை. உலக வாழ்க்கைக்காகத்தான் சாஸ்திரங்கள் என்று ஒப்புக் கொள்ளுவோமானால், உலக வாழ்க்கையோடு சாஸ்திரம் முரண்படும்பொழுது, சாஸ்திரத்தைத்தான் தள்ள முடியும், தள்ள வேண்டும். காந்தியின் குற்றம் இதுதான்.

* * *

சாஸ்திரத்தைச் சரித்திரக் கண் கொண்டு பார்க்க வேண்டும். சாஸ்திரங்கள் மனித வாழ்க்கையைத் திறம்பட நடத்துவதற்காக, வகுக்கப்பட்ட சட்ட திட்டங்கள். சரித்திர ஓட்டத்தில் சட்டதிட்டங்கள் மாறித்தான் தீரும். முப்பது ரூபாய் வாங்கிக் கொண்டு, ஏழு, எட்டு, பதினைந்து, இருபத்துமூன்று என்று கூட்டல் போடும் குமாஸ்தா உத்தியோகம் பார்க்க வேண்டும் என்று எந்தச் சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது? காலத்துக்கேற்றபடி, சரித்திரத்தின் போக்கை அனுசரித்து, வாழ்க்கை மாறி விடுகிறது. துறைமுகத்திலிருக்கும் கப்பலை வேண்டுமானால், நிலைத்த முளைகளில் முடிந்த கயிறுகளைக் கொண்டு கட்டி விடலாம். பாய்ந்தோடும் கப்பலுக்குப் பாய்மரமோ அல்லது நீராவியின் விசையோதான வேண்டும். வாழ்க்கை என்பது பாய்ந்தோடும் கப்பல். இயற்கையின் படைப்பு அது; யார் என்ன செய்ய முடியும்?

* * *

வாழ்க்கை அனுபவத்தில் தோன்றிய பல தத்துவங்கள் சாஸ்திரமாயின. பெரிய மனிதர்கள் — மகான்கள் — அவற்றைக் கண்டு பிடித்துக் கொடுத்த ரூபந்தான் சாஸ்திரம். ஒவ்வொரு தத்துவத்தையும் ஒவ்வொருவனும் கண்டு பிடித்துத்தான் வாழ்க்கை நடத்தவேண்டும் என்பது நடக்கிற சங்கதியல்ல. பிறர் அனுபவத்தினின்றும் கண்டுபிடித்த உண்மைகளை நாம் ஏற்க வேண்டியதுதான். ஆனால், எப்படி ஏற்பது? அரிசி நமது தேகத்தில் உற்பத்தியாகவில்லை. ஆனால், சமைத்து உண்ணும் சாதம் நமது தேகத்தோடு தேகமாகிவிடுகிறது. உண்ணும் உணவு ஜீரணிக்கப்பட வேண்டும். இந்த மாதிரிதான் நாம் கற்கும் உண்மைகளும், நம்முடைய சொந்த உடைமை போலாகிவிட வேண்டும். இந்த முறையில் சாஸ்திரங்களை ஏற்றால், வாழ்வு பிரகாசமடைகிறது. இதைக் காந்தி செய்கிறார். கிளிப்பிள்ளைபோல் சாஸ்திரம் படித்துக்கொண்டிருப்பவர்களுக்கு இந்தக் கவலை ஏது? வாழ்க்கைக்காகத் தான் சாஸ்திரம் என்றுணர்ந்த காந்தி, கிளிப்பிள்ளைச் சாஸ்திரம் பேச மாட்டேன் என்பது குற்றமானால், அந்தக் குற்றத்தைச் சொந்த புத்தி படைத்த அத்தனை பேரும் செய்ய வேண்டுமென்பதைத் தவிர வேறுவழி கிடையாது.

வாங்கத் தவறாதீர்கள்!

வாசிக்க வேண்டிய புத்தகங்கள்!!

ஸ்ரீமான் ஆக்கூர் அனந்தாச்சாரியார்
எழுதிய

சங்கீத வித்வான் **கிட்டப்பா சரிதம்**

விலை அணா 2.

டால்ஸ்டாய் அல்லது **மகாத்மா காந்தியின் குரு**

விலை அணா 3.

தபால் கூலி வேறு.

வியாபாரிகளுக்கு ஏராளமான கமிஷன் கொடுக்கப்படும்.

கந்தன் பிரஸ்,

32, பிராட்வே, சென்னை.

தியாகம்

(மு. வேலி)

திம்மனூர் ஒரு சிறு கோட்டை. இது முற்றுகை யிடப்பட்டு மூன்று வாரங்களாய் விட்டன. பழிக்கு வெட்கப்படுபவன் நெஞ்சைக் கொடிய வார்த்தைகள் வாள் கொண்டறுக்கிற மாதிரி வெடி குண்டுகள் மதிலைத் தாக்குகின்றன. கோட்டைக்குள் சுமார் 20 ஆயிரம் பேராவதிருப்பார்கள். இவர்களில் பாதிக்குமேல் பெண்கள்; மீதியுள்ளவர்களிலும் பெரும்பாலோர் சிறு பிள்ளைகள். வீரர்களின் தொகை நாளுக்கு நாள் சுருங்கிக் கொண்டே வருகிறது. வெளியில் போய் வரும் வழிகளெல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. ஜனங்கள் உற்சாகம் குன்றி விட்டனர். எதிரிகள் தொலையப் பெண்கள் கும்பிடுகின்றனர். கோபம் மீறின சிறுவர்கள் சிறு கற்களை எடுத்து விரோதி இருக்குந் திக்கை நோக்கி எறிகிறார்கள். இராஜா சிறு பாண்டியன் கூடக் காய்ச்சலால் படுத்த படுக்கையாய்க் கிடக்கிறான். இவன் நிலை மற்றவர்கள் மனதில் நிராசையையே பரப்பிற்று.

இராஜா எதற்கும் தன் காதல் அரசியிடம் யோசனை கேட்பது வழக்கம். இன்று ராணி குமாரியிடம் கேட்டான்: "அவசியம் இன்று பகைவன் நம் கோட்டையுள் புகுந்து விடுவான்."

குமாரி, :—அத்தினத்தை, இக்கண்களால் பார்க்காதிருக்க ஆண்டவன் அருள் செய்ய வேண்டும்"

இராஜா :—இவ்வனுதைப் பெண்களையும், சிறுவர்களையும் பற்றித்தான் எனக்குக் கவலை. பூ வறண்டால் வாசனையும் மறையும் அல்லவா?"

கு :—"நாம் பின் வெளியேறுவது தான் எப்படி?"

இ :—"என்ன நம் குடிகளை விட்டு விட்டா?"

கு :—ஆம், இவர்களை விட்டுப் பிரிதலே இவர்களுக்கு நன்மை தரும். நாம் இல்லாவிட்டால் ஒரு வேளை பகைவர்கள் இவர்கள் மீது கருணை காட்டக்கூடும்.

இ :—"இல்லை, எவ்வீரர்கள் எனக்காகச் சண்டையில் செத்தார்களோ அவர்கள் குடும்பத்தார்களைத் தனியே விட்டு வர என்னால் முடியாது"

கு :—"இங்கிருந்து கொண்டே அவர்களுக்கு என்ன உதவி செய்ய முடியும்?"

இ :—"உயிரைக் கொடுக்க முடியும். உயிர் போகும் வரை சண்டைபோட முடியும்."

கு :—வெட்கத்தினால் தலையைக் கவிழ்த்துக் கொண்டு யோசிக்கலானாள். "பிரிய தோழர்கள் நெருப்பில் வாடுவதைக் கண்டும் தன் உயிரே பெரிதென்று எண்ணி அவர்களைக் கைவிடுதல் கோரமான அநியாயம். நான் இவ்வளவு சுயநலம் ஏன் விரும்பினேன்?"

இதற்குள் ஒரு யோசனை தோன்றக் கேட்டாள்:—"விரோதிகள் நம் ஜனங்களுக்கு எந்த விதமான தீங்கும் செய்யவில்லை என்று உறுதி தந்தால் நீங்கள் கோட்டையை விட்டு வெளி ஏறுவீர்களா?"

இ :—"இவ்வுறுதி யார் தருவது?"

கு :—"பகை அரசனின் சேனாபதி."

இ :—"அப்படியானால் உன் இஷ்டப்படி நடக்க யாதொரு தடையும் இல்லை."

இரண்டாம் நாள் காலை. குமாரி தன் கணவனிடம் சென்றாள்.

"உங்கள் வாக்கை நீங்கள் நிறைவேற்றுங்கள். இதோ எதிரிச் சேனாதிபதியின் உறுதி மொழிப் பத்திரம்."

"குமரீ! இப்பத்திரத்தை யார் மூலம் பெற்றாய்? இதற்காக எவ்வளவு தியாகம் செய்ய வேண்டியிருந்தது?"

"நிரம்ப"

"கேட்கலாமா"

"நல்ல வாலிபப் புத்திரன்"

இராஜாவின் உள்ளத்தை இவ்வார்த்தைகள் அம்பு போல் தைத்தன. கேட்டார்:—"யார்? சுந்தரனா?"

"இல்லை, சொக்கநாதன்."

அவவளவுதான். சுடப்பட்ட பறவை படபடவென்று சிறிது தூரம் இறக்கை அடித்துக் கொண்டு மேலே எழுந்து மறுபடியும் தரையின் மேல் விழுவதுபோல் இராஜாவும் திடுக்கிட்டுப் படுக்கையை விட்டு எழுந்து பின் சக்தி இல்லாமல் சாய்ந்து விட்டான். சொக்கநாதன் அவனுக்கு மனதுக்குப் பிடித்த மகன். தேசத்தின் வருங்கால ஆட்சி அவனையே பொறுத்திருந்தது.

போதிய பலம் வந்தவுடனே சிறு பாண்டியன் சொன்னான்:—"குமரீ! நீ மிகக் கெட்ட காரியம் செய்து விட்டாய்."

மத்யானம். சூரிய பகவான் தலைக்கு மேலிருந்து நெருப்பை ஊற்றுகிறான். வேகமாய் வீசுங்காற்றும் சூட்டையே எங்கும் பரப்புகிறது. சிறு பாண்டியன் பல்லக்கில் போகிறான். கூடவே குமாரியும் குதிரைமீது செல்கிறாள். இராஜாவின் சுரம் இன்னும் குறைந்தபாடில்லை. உட்காரவும் உடம்பில் சக்தி இல்லை. கோட்டையை விட்டு வெகு தூரம் வந்தாய் விட்டது. எங்கு பார்த்தாலும் வறட்சி. குளத்தில் நீரில்லை; குட்டையில் நீரில்லை. நீண்ட மரங்களும் பட்டுவிட்டன.

அகஸ்மாத்தாய் குமாரி பின்னே திரும்பிப் பார்த்தாள். சிறு குதிரைப் படை தோன்றிற்று. இது தன் சத்துருவைச் சேர்ந்ததென எண்ணினாள். மறுபடியும் தன் மகன்தான் உதவிக்காகப் பல குதிரை வீரர்களுடன் வருகிறானோ எனச் சந்தேகித்தாள். ஆசையும் ஏமாப்பும் தொடர்ந்து தொடர்ந்து வந்தன. இதற்குள் அப்படையும் அணுகியது. ஆ! விரோதிகள்!

"பல்லக்கை இறக்கு; எதிரியைத் தாக்கு; அஞ்சாதே. இருந்தால் இன்பம்; இறந்தால் சொர்க்கம்" எனக் குமாரி உத்தரவிட்டாள். வீரர்களும் அப்படியே செய்ய விரைந்தனர்.

சிறு பாண்டியன் தேகம் மிகவும் கேவலமான நிலையிலிருந்தது. அணையும் சமயத்தில் இருக்கும் தீ காற்றுப்பட்டவுடன் சுடர்விட்டு எரிகிறது. இராஜனும் 'பகைவர்கள்' என்று கேட்ட மாத்திரத்தில் ஊக்கம் கொண்டான். வீரம், உறுதி, ஆண்மை ஒவ்வோர் அங்கத்திலும் பிரகாசித்தன. வில்லை எடுத்தான். ஆனால் ஐயோ! எதிரி

களைத் தூள் தூளாய்ப் பறக்கடிக்கும் வில்லை இப்பொழுது வளைக்கவும் முடியவில்லையே! தலை சுற்றிற்று; பாதம் நிலத்தைவிட்டு எழும்பவில்லை. மறுபடியும் கீழே சாய்ந்து விட்டான். குமாரி கஷ்டப்பட்டுக் காதற் கணவனை உட்கார வைத்தாள். 'இன்னுயிர்த் தலைவா' என்பதைத் தவிர வேறொரு சத்தமும் அவள் வாயிலிருந்து வரவில்லை.

சி:—'குமரீ, அதோ, மற்றொரு வீரனும் வீழ்ந்தான். ஆ! எந்த நிலையை மிகவும் வெறுத்தேனோ அதே வந்து சூழ்ந்தது. இவ்விரு கண்கள் முன் என் எதிரிகள் உன் மெல்லிய உடம்பைக் கைப்பற்றுவார்கள்; நான் உனக்கு எள்ளளவும் உதவி செய்யாது இங்கேயே கிடப்பேன்; ஐயோ! இதை நினைக்கவும் கொடுமையா யிருக்கிறதே, இதற்குள் ஏதோ எண்ணம் மனதில்படக் கூறலானான்:

“நீ ஒரு காலத்தும் என் வார்த்தையைத் தட்டினதில்லை”

கு:—“இறந்தாற்கூடத் தட்ட மாட்டேன்.”

சி:—“ஒரு வரம். இதுவே கடைசி. நீ தரவேண்டும்”

கு:—“கோடி கோடியாய்க் கேளுங்கள்”

சி:—“எது சொன்னாலும் செய்வாயல்லவா?”

கு:—“சந்தேகமின்றி”

சி:—“நீ வாக்குக் கொடுத்து விட்டாய். தவறக்கூடாது”

கு:—(நடுங்கிக் கொண்டு) “சீக்கிரம் சொல்லுங்கள்”

சி:—“என்மேல் விரோதிகள் கை படக்கூடாது. நான் கைதியாகச் சம்மதிக்க மாட்டேன். அந்நியன் ஆட்சியின் கீழ் வாழ்வது மனித தர்மத்திற்கே ஆகாது. ஏராளமாய்ப் பொருளும், வேண்டிய சௌகரியங்களும் இருந்தாலும் அடிமை அடிமையே. அவன் சுதந்திரக்கொடி வீசும் எல்லா நாட்டாராலும் எள்ளி நகையாடப்படுவான். ஆதலால் பகைவர் அணுகுமுன் நீ உன் கையாலேயே என் மார்பில் இவ்வாளால் குத்தவும்”

குமாரி மனம் திடுக்கிட்டது. 'இன்னுயிர்த் தலைவ!'—இதற்குமேல் ஒன்றும் பேச முடியவில்லை. கண்களில் நிராசை விளங்கிற்று.

'கைகளில் விலங்கு பூட்டப் படுவதற்காக நான் பிறக்கவில்லை' எனக் கர்ஜித்தான்.

கு:—'ஐயோ! நான்...நான் எப்படிச் செய்வேன்?'

பாண்டியனுடைய கடைசிச் சிப்பாயும் இறந்துவிட்டான். கோபம்பொங்க 'இப்படித்தானா மானத்தைக் காக்கும் கௌரவம் பொருந்திய நீ நடந்து கொள்வது?' என இராஜன் உறுமினான்.

எதிரிகள் நெருங்கிவிட்டனர். வேதனையும் நாணும் மிக்க கண்களுடனே குமாரியைப் பாண்டியன் நோக்கினான். இராணி ஒரு கணம் நிச்சயமில்லா மனதுடன் நின்றாள். சங்கடத்தில் சிலருக்குத் திடீரென்று உறுதி வந்துவிடுகிறது. ஒரே வினாடி, பாண்டியன் கைதியாயிருப்பான். ஆனால் குமாரி புலிபோல் பாய்ந்து தன் இன்னுயிர்க் காதலன் ஆசை நெஞ்சில் வாளைச் சொருகிவிட்டாள்.

காதற் படகுக் காதற் கடலில் மூழ்கி விட்டது. இராஜனுடைய மார்பிலிருந்து இரத்தம் பெருக்கெடுத்தது; முகத்தில் மட்டும் சொல்லற்கரிய சாந்தம், சந்தோஷம், மந்தமான வீரம் நிலவொளிபோல் பிரகாசித்தன.

என்ன அற்புதமான காட்சி! எவள் தன் நாதனுக்காக உயிரையும் கொடுக்கத் தயாரா யிருந்தாளோ, எவனுடன் காதற் கதை பேசிக் கலவியில் தன்னையும் மறந்து ஒன்றி யிருந்தாளோ, எவனுடைய இருதயம் தன்னை எப்பொழுதும் நினைந்து கொண்டிருந்ததோ, அவனை இன்று குமாரி கொன்றாள். என்ன கௌரவமான, வீரமான, புனிதமான, கற்பிற் கரசிக்குரிய தியாகம்!

இச்செயல் விரோதிகளையும் மயக்கி விட்டது. அவர்கள் தலைவன் “மகாராணி! தங்கள் வீரம் எங்களை அடிமைப் படுத்திவிட்டது. உங்கள் உத்தரவை எதிர்பார்க்கிறோம்” என்றான்.

கு:—எங்கள் புத்திரர்கள் உயிருடன் இருந்தால் இக்காகிதச் சுருளையும், இந்த இரண்டு உடம்பையும் அவர்களிடம் ஒப்பிக்கவும்.

சொன்னதுதான் தாமதம். கையிலிருந்த வாள் மார்பில் குத்தியது. இரத்தம் பீறிடக் கணவன் உடல்மீது சாய்ந்து விட்டாள்.

அன்பு அன்பில் கலந்துவிட்டது. என்ன காதல்! அந்நியனுக்கடிமைப் பட்டு வாழ்வதிலும் உயிருக்குயிரான புருஷனையும், தன்னையும் கௌரவமென்னும் பீடத்தில் பலியிட்டாள். இஃதன்றோ வீரம்!

குமாரி குறித்த சுருளை எதிரிகள் பிரித்தனர். அதில் காணப்பட்ட பாட்டு.

'பந்தமுற் றெத்தனை நாள்—இந்தப்
—பாரினில் ஈடழிதல்,தொந்த மில்லாத
சுக—வாழ்வைத்—தோற்று விப்போம்
வாராய், இந்த உடல் சதமா—இஃ—
தென்றும் இறப்பதுவே, தந்தை மரிப்
பவனே—கெட்ட, தாயும் மறிப்பவ
ளே.'

குருடனிடம் முகம் பார்க்கும் கண்ணாடியைக் கொண்டு போய்க் கொடுக்கலாமோ? கொடுத்தால், அவன் நமக்கு வந்தனம் செலுத்தப் போவதில்லை என்பது நிச்சயம்.

* * *

ஓட்டை மணி ஒருபோதும் கணீரென்று அடிக்கப் போவதில்லை.

* * *

வாத்துக்களை விசாரிக்கும் சபையில் குள்ளநரிகளை ஜூரிகளாக நியமித்தால் என்ன நடக்கும் என்பதைச் சொல்ல வேண்டுமா?

* * *

ஜேபி கனத்திருக்குமானால், நண்பர்களுக்குக் குறைவே கிடையாது.

* * *

காலன் வரும்போது, பஞ்சாங்கம் பார்த்து வருவதில்லை.

* * *

செத்த சிங்கத்தைவிட உயிரோடிருக்கும் நாய் பெரியது.

* * *

நல்ல கதையாய் மாத்திர மிருந்தால், இரண்டு தடவை சொன்னாலும் ரஸம் குறைந்து போகாது.

* * *

பேசும் பேச்சு ரஸமா யிருந்தால், கேட்பவரைக் “கொஞ்சம் கவனிக்க வேண்டும்” என்று கெஞ்சவேண்டியதே யில்லை.

* * *

குற்றம் சொல்லுமுன்பேதான் குற்றவாளியல்லவென்று ஒருவன் சமாதானம் சொல்ல ஆரம்பித்தால், அவன் குற்றவாளிதான் என்பதற்கு வேறு சாட்சி வேண்டாம்.

நகை

A. S. நஞ்சையா B.A., B.L.

என் சகோதரிகள் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும். என் கட்டுரையைப் படிக்கக் கூடாது என்று, தங்கள் கணவர், மக்கள், பெற்றோர், சிநேகிதர்—இன்னும் யாருக்கு வேண்டுமென்றாலும் 144 இ. பி. கோ. வாய்ப்பூட்டுச் சட்டம் போட்டு விடட்டும். என் கட்டுரையைத் தங்களுடைய எதேச்சாதிகாரத்தால் பறிமுதல் செய்து விட்டாலும் சரி. எனக்கு இந்த நிமிஷம் அதைப்பற்றி அக்கரையில்லை; ஏனெனில் நான் என் மனதிற்குத் தோன்றியதை உள்ளது உள்ளபடி எழுதத் துணிந்து விட்டேன்.

அதாவது தங்கம், வெள்ளி, ரத்னங்கள் முதலியவற்றால் செய்த நகைகள் இருபாலாருக்கும் இன்றியமையாததல்ல. ஆம். இயற்கை யழகே போதும் என்று இருபாலாரும் ஒத்துக் கொள்ளுவார்கள். ஆனால் நான் அதை நம்ப மாட்டேன். அவர்கள் ஒத்துக் கொள்வதெல்லாம் வெளிக்குத்தான். அவர்கள் தங்களது இருதயத்தை ஆராய்ந்து பார்ப்பார்களானால் அவைகளின் கர்ப்பக் கிரகத்தில் 'நகை' என்று கொட்டை எழுத்தில் மாலை நேரங்களில் சினிமாக் கம்பெனியின் வாசலில் கம்பெனியின் பெயர் மின்சார ஒளியில் மின்னுவதைப் போல் மின்னும். தங்கம் விலை ஏறிவிட்டதெனில் என்ன முழுகிப் போய்விட்டது. விலை அதிகமாக ஆக 'நகை'களின் மதிப்பும் அதிகமாகி, இதயத்தில் நகையாசை முன்னைக் காட்டிலும் அதிகமாய்ப் பிரகாசிக்கிறது.

ஆனால் நகைதான் எதற்காக அணிந்து கொள்ள வேண்டுமென்று நம் சகோதரிகளைக் கேட்டால் 'மீனாட்சி போட்டிருக்கிறாள், காமாட்சி போட்டிருக்கிறாள். நகை யில்லாவிட்டால் லக்ஷணமில்லை, அவலக்ஷணமாயிருக்கிறது. மேலும் நகை வசீகரம் கொடுக்கிறது. வசிய சக்தியை அதிகமாக்குகிறது. என்றெல்லாம் இன்னும் என்னென்னமோ கூறுகிறார்கள். இவையனைத்தையும் அப்படியே ஒரு வார்த்தைகூட விடாமல் உண்மை என்று நான் ஒப்புக் கொள்ளுகிறேன்.

ஆனால் இந்தப் பஞ்ச காலத்தில் தோட்டி முதல் தொண்டமான் வரை கஞ்சிக்கே தாளம் போடுகின்றனர்; எல்லோரும் சிக்கனம் சிக்கனமென்று சிக்கன முறையை நாடுகின்றனர். சிக்கனக் கோடாலியும் பலாபலனை அறியாமலும், இடம் பொருள் ஏவல் முதலியவற்றைக் கவனியாமலும் கண்மூடித்தனமாய்ச் சம்பளம், உத்யோகம், வருமானம் முதலியவற்றை மனம் போனபடி வெட்டித் தள்ளுகிறது. இதுசமயம் பணம் கொடுத்து நகை செய்வதோ, வாங்குவதோ அவ்வளவு லேசாயிருக்கிறதா? சகோதரிகளே! வெல்வெட் தலையணை மீது உங்கள் காதலர்களுடைய வலக்காதில் நீங்கள் எத்தனை உரு ஜபித்தாலும் 'நகை' என்ற மந்திரம் மட்டும் முன்போலச் சரியாய்ப் பலிப்பதில்லை. பூஜா விதிப்படிக்குடங் குடமாய் உங்கள் பதிகளின் சிரத்தின் மீது கண்ணீர் விட்டு உள்ளங் கரைந்து முறையிட்டாலும், பல்லாயிரக் கணக்கில் புஷ்பமாரிபோல் முத்தமாரி பொழிந்தாலும் நீங்கள் கோரும் நகை வரம் மட்டும் கிடைப்பதில்லை. அப்படியில்லாமல் வரம் கிடைத்துவிடுகிறதென்றாலும் அது வாக்களவிலேயே நின்று விடுகிறது; செய்கையில், அதாவது உங்கள் கழுத்திலோ, கையிலோ, காலிலோ, முகத்திலோ, தலையிலோ எங்காயினும் சரி ஒரு நகைகூட விழுவதில்லை. அதன் பயனாக உங்கள் முகத்திலும் 'நகை' தோன்றுவதில்லை.

இதற்காக நீங்கள் இதுசமயம் வருத்தப்பட வேண்டாம். நமது மகாத்மா காந்தி உங்களுக்கு ஒரு பேருதவி செய்ய முன் வந்திருக்கிறார். அவரொரு விலையில்லா நகையைக் கண்டு பிடித்திருக்கிறார். அதை வாங்கவோ, அணியவோ பணங்காசு தேவையில்லை. எங்கு பார்த்தாலும் இரைந்து கிடக்குமென்றாலும் அது மாணிக்கத்திலும் விலையுயர்ந்தது. யாரும் அணியலாம், எப்போதும் அணியலாம். உண்மையில் மகாத்மாவுக்கு வயது 63-க்கு மேலாகிறது. இருந்தாலும் அவர் தனது நகையைக் கழற்றுவதே யில்லை. அவருடைய பொக்கை வாயில் அது சதா தவழ்ந்து விளையாடிக் கொண்டிருக்கிறது. அதன் மகிமையால் அவர் வெள்ளையர்களையுங் கூட வசப்படுத்தி விடுகிறார். அந்த நகையைக் கண்டால் வணங்கா முடியும் வணங்கி விடுகிறது, கல் மனமும் கரைந்து விடுகிறது. உன்னை விட்டேனா பார் என்று கருப்புக் கொடி பிடித்து உறுமிக்கொண்டு வந்த வைர நெஞ்சர்களும் அவர்தம் நகையைக் கண்டு ஏமாந்து, தாம் செய்வதாய் உறுதியிட்ட காரியத்தையும் மறந்து, அவர் சொல்வதற்கெல்லாம் பெருமாள் மாடு மாதிரித் தலையாட்டுகிறார்கள். மற்றும் சிலர் சர்க்கஸ் புலிகளைப்போல் உறுமிக் கொண்டே வந்த வழியே திரும்பி விடுகின்றனர்.

சகோதரர்களே—சே! சே! அப்படிச் சொல்லலாமா? பெண்களுக்கல்லவோ முதல் முதல் மரியாதை செலுத்த வேண்டும்—சகோதரிகளே! சகோதரர்களே! நமது மகாத்மா கண்டு பிடித்திருக்கும் நகை எதுவென்று உங்களுக்கு இதற்குள் தெரிந்திருக்கும். தெரிந்தாலும், தெரியாவிட்டாலும் நானும் சொல்லி விடுகிறேன். அவர் கண்டு பிடித்திருக்கும் நகை சிரிப்பு. அவர் அந்த நகையின் மகத்வத்தைக் கண்டு பிடித்தது முதல் அதை அணிந்த வண்ணமாகவே யிருக்கிறார். 'நகைச் சுவை யொன்றில்லையெனில் நான் நெடுநாளைக்கு முன்னமேயே இறந்து போயிருப்பேன்' என்று அவர் கூறுகிறார். இதனால் அவர் எவ்வளவு தூரம் இந்த நகையைப் பற்றி மதிப்பு வைத்திருக்கிறார் என்பது நன்கு விளங்கும். அவர் எந்த மீட்டிங்குக்குப் போனாலும் அந்த நகையைப் போட்டுக் கொள்ளாமல் போவதில்லை. சமீபத்தில் ஐரோப்பா சென்றபோது அவர் தூங்கும்போதும், தனியே யிருக்கும் போதுங்கூட அந்த நகையைக் கழற்றவே யில்லையாம். இங்கிலாந்திருந்து திரும்பி வந்ததும் அரசாங்கத்தார் அவரைக் கைதி செய்துவிட்டனர். அப்போதுங்கூடக் 'காந்தித் தாத்தா,' தமது புன்சிரிப்பைக் கைவிட வில்லையாம். கைதி செய்ய வந்த போலீஸ் கமிஷனரைப் பார்த்துச் சிரித்தாராம். ஆஸ்ரம வசிகளாகிய பெண்கள் எல்லோருடைய துக்ககரமான அழுகையினிடையிலுங் கூடக் காந்தி ஒருவரே சிரித்த முகத்துடன்

இருந்தாராம். நாமும் அப்படிச் செய்தாலென்ன?

ஆனால் அப்படிச் செய்வதற்கு முன் நான் ஒரு எச்சரிக்கை செய்ய விரும்புகின்றேன். அதாவது நகையிலும் அநேக தினுசுகள் உண்டு. முதலாவது இளநகை அல்லது புன்முறுவல். இது குமரிகளுக்குத்தான் பிடித்தமானது. பற்கள் சுத்தமாயும், ஒழுங்காயு மிருக்க வேண்டும். உதடுகள் சிறிது மலர்ந்திருக்க வேண்டும். அப்போது தான் இளநகைக்கு வேகம் உண்டு. வெளி நீட்டிய குரங்குப் பல்லர்களுக்கு இள நகை பலிக்காது. இடம் பொருள் ஏவலைக் கவனித்து ஒரு யுவதி புன்னகை புரிந்தால் அவளுக்கு அந்த க்ஷணமே கடவுளும் கட்டுப்படுவார். தவிரக் குமாரிகளுக்குப் பெரு நகை, விடா நகை முதலியன அழகு செய்வதில்லை. ஆனால் அதற்கு மாறாக விகாரத்தை விளைத்து, அழகை அடியோடு தொலைத்து விடுகின்றன. இதற்குத்தான் அசட்டுச் சிரிப்பு என்று பெயர். யுவதிகளைப்போலவே யுவர்களுக்கும் புன்முறுவல் பயன்தரும் என்பதை நாம் அனுபவத்தில் காணலாம். ஆனால் பற்களை மட்டும் ஒழுங்கான முறையில் வைத்திருக்க வேண்டியது அத்தியாவசியம்; அத்துடன் அதிகமான புகைக் குடியினால் உதடுகள் கருத்துப் போகாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இரண்டாவதாகப் பெரு நகை அல்லது களி நகை. வயிறும், வீடும் வெடித்து விடுமோ என்று சந்தேகப்படும்படி இடைவிடாமல் வெகுநேரம் வரை நகைப்பதுதான் பெரு நகை. கிராமபோனில் இருவர் ஓயாது விழுந்து விழுந்து சிரிப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? — பார்த்திருக்கிறீர்களா யென்றால் கேட்டிருக்கிறீர்களா என்று அர்த்தம். அதை விட்டு விடாதீர்கள். அதுவேதான் பெரு நகை. இது குடியர்களுக்கு இயற்கையாகப் போதையுடன் கிளம்புவது; வெள்ளையர்களால் அதிகமாகக் கையாளப்படுவது. இது களியாட்ட வெறிக் கூத்துகளில் பயன்படுமே யல்லாது, அமைதியான சமூக வாழ்விற்கும் இதற்கும் ஜன்ம விரோதம். பிளேக் காலமானால் வீட்டிலிருக்கும் எலிகளை விரட்டப் பூனை வளர்க்க அவசியமில்லை; கரும்புத் தோட்டத்தில் குள்ள நரிகள் புகாமல் காப்பாற்ற இரவில் பொய் வேட்டுகளுக்குப் பதிலாக உபயோகிக்கலாம். அவ்வளவுதான். அதற்கு மேல் விடாநகை பயன்படாது.

மற்றப்படி நகை எல்லாவித வியாதிகளுக்கும் பரம ஔஷதம் என்று வைத்திய சாஸ்திர நிபுணர்கள் அடிக்கடி வற்புறுத்தி வருகிறார்கள். ரத்த ஓட்டத்தை வேகமாக்கும், பசியை அதிகப்படுத்தும், தேக ஆரோக்கியத்தை நிலை நிறுத்தும். ஆனால் அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகுமல்லவா? ஆகையால் புன்முறுவலை மட்டும் மிதமாக உபயோகித்தால் நமக்கு எல்லா நன்மைகளும் எப்போதும் உண்டாகும்.

தவிர, நகையிலும் கோபச் சிரிப்பு, உதாசீனச் சிரிப்பு முதலிய பல ஜாதிகள் உண்டு. வைர மூக்குத்தி அணிவதால் கண் கெட்டுப் போகும் என்கிறார்கள். அதுபோலக் கோப நகை முகத்தையே கெடுத்துவிடும். வயது தொண்ணூறுஞ் சென்ற தொண்டுக் கிழவிக்கு எல்லா நகைகளையும் போட்டுப் பார்த்தால் எத்தனை அழகாயிருக்குமோ அத்தனை அழகு கோபச் சிரிப்புக்கு முண்டு. மேலும் அந்நகை நம்மை வம்பிலும், வழக்கிலும் கொண்டுபோய்த் தள்ளும். உதாசீனச் சிரிப்பு எப்பொழுதும் ஆபத்தான சமாசாரம். உதாரணமாகத் திரௌபதி துரியோதனன் வழுக்கி வீழ்ந்தது கண்டு நகைத்தாள். அதற்காகவே பாரதப் போரும் நடந்தது, அதன் பயனாக அநேகர் மாண்டனர். ஆகையால் உதாசீன நகையை எப்போதும், எக்காரணத்தாலும் அணியக் கூடாது.

சகோதரிகளே! சகோதரர்களே! முடிவாக ஒன்று சொல்லுகிறேன். விலையுயர்ந்த பட்டாடைகளணிந்து, நீங்கள் உச்சி முதல் உள்ளங்கால் வரைப் பொன்மயமா யிருந்தாலும், பாதாதிகேசம் வரைப் பச்சை மயமாயிருந்தாலும் நான் சொன்ன நகை உங்கள் முகத்தில் ஆஜரில்லாம லிருந்தால் நீங்கள் செய்துகொண்ட அலங்காரம் அத்தனையும் வீணே—செத்த பிணத்தைச் சிங்காரிப்பது போல்தான். நான் சொல்வதில் நம்பிக்கையில்லையானால் நீங்கள் இஷ்டமான எல்லா நகைகளையும் போட்டுக் கொள்ளுங்கள். உங்கள் காதிலும், மூக்கிலும், கழுத்திலும் தங்கமாக மின்னட்டும், வைரமாக ஜ்வலிக்கட்டும், திருமுகத்தை மட்டும் சுளித்துக் கொண்டு சிடு மூஞ்சியோடு கண்ணாடியில் பாருங்கள். உடனே உங்கள் அழகைக் கண்டு உங்களுக்கே வெட்கம் வந்து இனிமேல் முகத்தைச் சுளிப்பதை நிறுத்திவிடுவீர்கள். அதே மாதிரி ஒரு நகையும் போடாமல் புன்முறுவல் மட்டும் பூத்த உங்கள் வதனத்தைக் கண்ணாடியில் பாருங்கள். ஆபரணங்களில்லாமலிருந்தும் என்ன வசிகரம்.

இதனாலன்றோ காந்தி திக்விஜயம் செய்தார். அவருக்கு மட்டும் முன் பற்களிருந் திருப்பின் 28—12—31-ல் சுயராஜ்யத்தை மடியில் வைத்துக் கொண்டு பம்பாயில் கரை ஏறியிருப்பாரென்பதில் சந்தேகமில்லை.

ஆகையால் சகோதரி சகோதரர்களே! நீங்கள் வேறு நகைகளுக்கு ஏங்காதீர்கள். புன்னகையை என்றும் கை விடாதீர்கள். தூங்கும் போதும் நீங்கள் புன்னகையுடன் தூங்கக் கற்றுக் கொண்டால், சகோதரிகளே! உங்களை நிகர்ப்பவர் யார்? நான் சொல்லும் நகை சுயமரியாதைக் கட்சியைச் சேர்ந்தது. ஆகையால் அது ஜாதி வித்யாசம் பாராட்டுவதில்லை. எவ்வகுப்பினரும், எச்சாதியினரும் அணியலாம். இந்நகையைச் சரியானபடி உபயோகிக்கத் தெரிந்தால், வேறு நகைகளற்ற கைம்பெண்களை நம்மவர்கள் சகுனத்தடை யென்று கருதுவார்களா?

கடைசியாக ஒரு வார்த்தை? முன் பற்கள் விழுந்த பிறகும் உலகம் போற்றும் படியான 'காந்தித் தாத்தா' என் நகையால் இந்தியாவிலும் ஐரோப்பாவிலும் திக்விஜயம் செய்தாரல்லவா? இள வயதும் முகவழகும் படைத்த நீங்கள் என் நகையை மட்டும் சதா கழற்றாம லிருந்தால் உங்கள் நாட்டிலாவது—குறைந்தது உங்கள் வீட்டிலாவது—உங்கள் அதிகாரம் நடக்காமல் போய்விடுமா? ஆகையால் நீங்கள் எப்போதும் நகை போட்டுக் கொள்வதில் மகாத்மாவைப் பின் பற்றுங்கள். உங்களுக்கு எல்லா நன்மைகளும் உண்டாகும்.

நகைதனைப் போற்றி வாழ்.

கதரை அணியுங்கள்

காணாமற் போன தம்பி

(வ. ரா. எழுதியது)

"எங்கே, அம்மா, போகிறீர்கள்? உங்களுக்கு ஒருவரும் துணையில்லை போலிருக்கிறதே? தனியாக, பெண்பிள்ளை வழிப் பிரயாணம் செய்யலாமா? ரொம்பக் கெட்ட காலமாச்சே"........என்று ஒருவன் கேள்விமயமாகப் பொழிந்து கொண்டே போனான்.

கோர்ட்டில் குறுக்கு விசாரணையைப் போலக் கேள்விகள் கேட்டாலும், இந்தக் கேள்விகள் யாரிடம் கேட்கப்பட்டனவோ, அந்தப் பெண் வாய் திறக்கவில்லை. அந்த மனிதன் அலுக்காமல் கேள்விகளைக் கேட்கக் கேட்க, அந்தப் பெண்ணின் நடை வேகமடைந்தது. கேட்கிற மனிதன் யார், அவன் எப்படிப்பட்ட முகத்தோற்றமுள்ளவன் என்று அறியக் கூட மனமில்லாதவளைப் போல, பெண் நடந்து கொண்டாள். அவள் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

என்ன இருந்தாலும், கேட்டவன் ஆண்மகனல்லவா? பிறவி மூலமாய் அவனுக்குப் பெருமை உண்டோ, இல்லையோ, அது இயற்கைத் தாய்க்குத்தான் தெரியும். ஆனால் ஆயிரங் காலப் பரம்பரையினால் ஆணுக்குப் பெருமை உண்டு என்பதை அவன் மறக்கவில்லை. இதை அந்தப் பெண் மறந்து போனதைத்தான் அவனால் சகிக்க முடியவில்லை.

"ஏன், அம்மா, நான் கேட்கிறேன், பதில் சொல்லாமல் போகிறாயே" என்று கேட்டான். கோபத்தினால், போகிறீர்களே என்ற மரியாதை பறந்துபோய், போகிறாயே என்று மாறிவிட்டது. இதற்கும் பதில் இல்லை.

உடனே அவன் கனைத்துக்கொண்டு, "கேட்பதற்குப் பதில் சொல்லவேண்டியது மரியாதையில்லையா" என்று அவளுடைய முகத்தை உற்று, வெறித்துப் பார்த்தான்.

இதுவரையில்தான் தாங்கக்கூடிய எல்லை என்று அந்தப் பெண்ணுக்குத் தோன்றிற்றோ, என்னமோ, திடீரென்று, "மரியாதைக்குத்தான் பிரதி மரியாதை உண்டு. என்னை இத்தனை கேள்விகள் கேட்பதற்கு உமக்கு நியாயம் கிடையாது. பாத்தியமும் இல்லை. நான் கொடுக்காத பாத்தியத்திலிருந்து, நீர் 'மரியாதை' உபதேசம் செய்ய முன்வருவது தகாத காரியம்" என்று பேச்சை முடித்துவிட்டாள்.

எதிர்பாராத வகையில் பதில். ஆண்பிள்ளை திகைத்துப் போனான். இத்தகைய அவமானம் அவனுடைய வாழ்க்கையில் நேர்ந்ததேயில்லை. ஆண்பிள்ளைக்கும் இத்தகைய அவமானம் நேரலாமா என்று அவன் உள்ளம் பொங்கினான்.

"அம்மா! நீ அப்படிச் சொல்லப்படாது. பாத்தியத்தை நீ உன் வாயால், எனக்குக் கொடுக்காவிடினும், உனது தனித்த நிலைமை, அதை எனக்குக் கொடுத்துவிட்டதாக எண்ணிக் கொள்ளவேண்டும். நான் சொல்லுவதற்குத் தப்பர்த்தம் செய்துகொள்ள வேண்டாம். தனித்து ஒரு பெண் போவதாயிருந்தால், ஏதோ ஆபத்து நேர்ந்திருப்பதாகக் கொள்ளவேண்டும். அதிலே, உனக்கு நான் ஒத்தாசை செய்யலாமா என்று எண்ணிக் கேட்டேனே யொழிய, வேறில்லை. நீ மனஸ்தாபப்பட்டுக்கொள்ளுவதாயிருந்தால், நான் வாய் திறக்கவில்லை" என்று அவன் முடித்தான்.

பெண்ணின் மிடுக்கான வார்த்தைகளைக் கேட்டு, அவன் சுருதி இறங்கிப் போனான். சுருதி இறங்கிப் போனது இரண்டு பேருக்கும் தெரியும். அவன் அவமான மடைந்ததுபோல எண்ணினான். சுருதி இறக்கத்தைக் கண்டு, அவளுக்கோ, ரொம்ப சந்தோஷம். தகாத பாத்திய அதிகாரத்திலிருந்து, மனுப் பண்ணிக்கொள்ளும் குரல் அவனுக்கு உண்டானதைப் பற்றி நினைத்து, அவள் புன்சிரிப்புக் கொண்டாள்.

அவள் புன்னகையோடு நின்றுவிடவில்லை. "ஏன், அய்யா? உனக்கு எந்த ஊர்? எங்கே போகிறாய்? உனக்கு உத்தியோக முண்டா? கலியாணமாயிற்றா" என்று சரமாரியாகக் கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனாள்.

இது என்ன விபரீதம் என்று எண்ணும் நிலைக்கு அவன் வந்துவிட்டான். கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதாக எண்ணிக்கொண்டான்.

இவர்கள் யார் என்று சொல்லவில்லையோ? ஆண்மகனுக்குக் கோவிந்தன் என்று பெயர். துப்பறியும் நாவல்களிலே பிரசித்தி பெற்று விளங்கும் கோவிந்தன் அல்ல. இவன் நாடோடிக் கோவிந்தன். சென்ற மூன்று வருஷங்களாக, அவன் ஒரே இடத்தில் தரித்திருப்பதில்லை. வாழ்க்கையில் அவனுக்குப் பிடிப்பில்லை. அவன் ஊர் ஊராய், கால் நடையாகச் சென்று, திரிந்து கொண்டிருக்கிறான். வயது இருப்பத்துமூன்று இருக்கலாம். உத்தேசமாய்ச் சொல்லவேண்டியிருக்

கிறது. அவ்வளவுதான் முடிந்த காரியம்.

பெண்ணுக்கு வயது இருபது இருக்கலாம். இதுவும் உத்தேசம்தான். முகத்தைப் பார்த்தாலும், ஒருவாறு நிச்சயமாய்ச் சொன்னாலும் சொல்லலாம். பெண் முகத்தை வெறித்துப் பார்ப்பது மரியாதை யல்லவே? சீதையின் கால் கட்டை விரலை மட்டும் பார்த்ததாகவும், முகத்தைக் கண்டதில்லை என்றும் இலட்சுமணனைப் பற்றி ராமாயணம் வர்ணித்திருக்கும் பொழுது, நாம் வேற்றுப் பெண்ணின் முகத்தைக் கூசாமல் பார்ப்பது அழகாமா?

அவளுடைய முகத்தை நேரே பார்க்க முடியாத பொழுது, அவள் போகிற ஜோலி என்னவென்று கண்டறிய முடியுமா? இருந்தாலும், பின்னே நிகழ்ந்ததைக் கொண்டு, முன் கூட்டியே, சில சங்கதிகளைச் சொல்லுவது ஆசிரியர்களின் பிரத்தியேக பாத்தியம். அந்த பாத்தியத்தை இழக்க மனமில்லாமல், அவள் அவ்வளவு விரைவாகச் செல்லும் காரியத்தையும் ஒருவாறு சொல்லுவோம்.

அவளிருக்கும் ஊரில், சில நாழிகைகளுக்கு முன் சிறிய கலவரமொன்று நேர்ந்தது. கலவரத்துக்குக் காரணம் இதுதான். ஒரு அனாதைப் பெண். அவளை அவளுடைய புருஷன், வீட்டுக்குள் அடித்துக் கொண்டிருந்தான். அவர்கள் பக்கத்து வீட்டுக்காரர்கள். இந்தக் கொடுமையைப் பொறுக்க மனமில்லாத அவளுடைய தம்பி—வயது பதினெட்டு—பக்கத்து வீட்டுக் கலவரத்தில் பிரவேசித்தான். குடிகாரப் புருஷன் நீண்ட காலமாகத் தன் மனைவியைத் துன்புறுத்தி வந்தான். ஆனால் அன்றைக்கு அந்தத் திக்கற்ற பெண் அழுத குரல், அந்த இளைஞனுடைய மார்பில் அம்பு பாய்ந்தது போல இருந்தது.

தாள் போட்டிருந்த கதவை உதைத்துத் தள்ளிவிட்டு, அவன் உள்ளே நுழைந்தான். அவன் கண்ட காட்சியை அவனால் பொறுக்க முடியவில்லை. கம்பத்தில் பெண் பிணைக்கப்பட்டிருந்தாள். புருஷன் அரிவாளைக் கொண்டு, அவளுடைய தேகத்தில் கண்ட இடமெல்லாம் குத்திக் காயப்படுத்திக் கொண்டிருந்தான். ஒரே பாய்ச்சல். இளைஞன் அரிவாளைப் புருஷன் கையிலிருந்து பிடுங்கினான். இதற்குள், புருஷன் உலக்கையைக் கொண்டு, இவன் மண்டையில் போட்டான். மண்டைத் திறந்து போய்விட்டது. இவனோ அரிவாளை வீசி, அவன் முகத்தைக் குறி பார்த்து எறிந்தான். நெற்றியில் பட்டுவிட்டது. கொலை கொலை என்று புருஷன் சத்தம் போட்டான். ஜனங்கள் கூடிக் கொண்டார்கள். இரண்டு தரப்பாருக்கும் சார்பாகக் கட்சிகள். ஆனால் இளைஞனோ, ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவன். அவன் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கைதியாகக் கொண்டு போகப்பட்டான். தம்பியைப் பார்ப்பதற்காக, அந்தப் பெண் போய்க் கொண்டிருக்கிறாள். அவளுக்கு நாகம்மாள் என்று பெயர்.

"அதிருக்கட்டும். ஏதோ, ஒத்தாசை செய்வதாகச் சொன்னீரே, உம்மால் என்ன ஒத்தாசை செய்ய முடியும்? வெறும் வாய் வார்த்தை தானே" என்று பெண், குத்தலாகக் கேட்டாள்.

"அப்படியா" என்று கோவிந்தன் பெருமூச்சு விட்டான்.

"பெருமூச்சு விடுவதில் லாபமென்ன? வெறும் வார்த்தை யல்ல என்று கண்டிப்பாய்ச் சொல்லலாமே" என்று நாகம்மாள் இன்னும் குத்தலாகப் பேசினாள்.

"அப்படியா" என்றான் மீண்டும் கோவிந்தன்.

நாகம்மாள் சிரித்தாள். "அதற்கென்ன சந்தேகம் என்று அழகாய்ப் பேசிய கிளிக் கதைதான்" என்று முணுமுணுத்தாள்.

கோவிந்தனுக்குத் தாங்க முடியவில்லை. "அம்மா! வேண்டுமென்றே, என்னைக் கேலி செய்ய, நீங்கள் எண்ணங் கொண்டிருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. மௌனமாய் நீங்கள் உங்கள் வழி போகலாம்" என்றான்.

"மௌனமாக வழி நடந்த என்னை வம்புக்கு இழுத்துவிட்டு, என் பேரில் பழி போடுகிறீர்கள். நீங்கள் நினைத்தது மாதிரி, நான் (பெண்) தாழ்மையாகப் பேசாதது உங்களுக்குக் கோபம். பெண்கள் தாழ்மையாக நடந்துகொண்டு வந்ததனாலேதானே, அந்தப் பக்கத்து வீட்டுப் பாவி பெண்சாதியை அரிவாளினால் குத்திக் கொல்ல முயன்றான்? எங்களுக்கு ஆண்டவனும் துணையில்லை. ஆண்பிள்ளையும் துணையில்லை" என்று கசந்துகொண்டு, சொன்னாள்.

இதைக் கேட்க, கோவிந்தனுக்கு மனந் தாளவில்லை. "அம்மா, அப்படிச் சொல்லாதேயுங்கள். எல்லா ஆண்பிள்ளைகளையும் சகட்டு மேனிக்கு எண்ணிவிட வேண்டாம். ஆண்பிள்ளைகளுள் அப்பாவிகள் இருக்கிறார்கள்; கொடும்பாவிகளும் இருக்கிறார்கள். மனித வர்க்கத்தைக் கெடுக்கத் தோன்றிய பாவிகள் ஆண்பிள்ளைகள் என்று நீங்கள் எண்ணவேண்டாம். என்னால் என்ன ஒத்தாசை செய்ய முடியும் என்று கேட்டீர்கள். நல்லது. நல்ல காரியத்துக்கு, நியாயமான காரியத்துக்கு என் உயிரையும் கொடுத்து, ஒத்தாசை செய்ய எனக்குத் தைரியமும் ஆசையுமுண்டு" என்று குரலைச் சிறிது தாழ்த்திப் பேசினான்.

நாகம்மாள் கோவிந்தனுடைய அடக்க வினயத்தைக் கண்டு வியந்து போனாள். தான் கடுமையாசப் பேசினதை நினைத்து, வருத்த மடைந்தாள்.

"அய்யா, நான் செய்தது தவறு. நான் உங்களைக் கடுமையாகப் பேசிவிட்டேன். பெண்களை அவமதிக்கும் சாதாரண ஆண்பிள்ளையைப் போல, உங்களை மதித்து நான் பேசிவிட்டதைக் குறித்து, நான் மிகுதியும் வருந்துகிறேன். நீங்கள் மனத்தில் ஆயாசம் கொள்ளலாகாது" என்றாள் நாகம்மாள்.

கோவிந்தன் சொல்லுகிறான்:—"அம்மா! நீங்கள் கோபித்துக் கொள்ளலாகாது. தொட்டதை விட்டுவிட்டு மற்றதைப் பேசுவது, பெண்களின் லட்சணமோ? உங்களுக்கு நேர்ந்திருக்கும் கஷ்டமென்ன? அதைச் சொல்லுங்கள். அதைச் சொல்லாமல், நீங்கள் வீணாகத் தாமதம் செய்கிறீர்களே? அதனாலேதான், எனக்கு மனதில் ஆயாசம் ஏற்படுகிறது. ஆபத்துக் காலத்தில், பேச்சு அதிகம் பேசுவதில் பயனில்லை. ஆபத்தை நிவர்த்திக்க யோசனை செய்யவேண்டும்."

நாகம்மாளுக்கு உற்சாகம். புது ஆண் பிள்ளை என்று மனத்தில் நினைத்துக்கொண்டாள். அவனை நம்பலாம் எனவும் தீர்மானங்கொண்டு, காலையில் பக்கத்து வீட்டில் நடந்த வரலாற்றை ஆதியோடந்தமாகச் சொல்லி, கைதியாயிருக்கும் தன் தம்பியைப் பார்க்கப் போவதாக, கதையைச் சொல்லிமுடித்தாள்,

கோவிந்தனுடைய உடலும் உள்ளமும் ஏககாலத்தில் பூரிப்படைந்தன. "இவ்வளவுதானே" என்று அலட்சியமாகப் பேசுவது போல, பேசினான்.

"அய்யா! நீங்கள் பேசினதில் எனக்கு ஒருவாறு தைரியம் உண்டாகிறதென்றாலும், எங்களூர் நிலைமை உங்களுக்குத் தெரியாது. பக்கத்து வீட்டுக்காரன் போக்கிரி, பணக்காரன்; நாங்கள் ஏழை. எங்களுக்குப் பரிந்து பேச ஒருவரும் கிடையாது. அவன் கட்சியிலேதான், ஊரில் நாலு பேர்கள் சேருவார்கள். என் தம்பியின்பேரில், அவன் அபாண்டமான குற்றம் சாட்டியிருக்கிறான். என் தம்பிக்கும் அவனுடைய பெண்சாதிக்கும் நேசமாம். அதற்காக, என் தம்பி, அவனைக்கொல்லப் போனானாம். சாது வேஷம் போட்டுக்கொண்டு, என் தம்பியை வழி மறித்த பக்கத்து வீட்டுப் பெண்ணைப் பல இடங்களில் என் தம்பி குத்திவிட்டானாம்! இது பக்கத்து வீட்டுக்காரன் சொல்லுகிற பித்தலாட்டம். என் தம்பியோ, ஒன்றுமறியாத சாது. எந்தப் பெண்ணையும் முகத்தைப் பார்த்து அறியாதவன். அவனை எப்படித் தப்புவிப்பது?" என்று சொல்லி முடிப்பதற்குள், அவள் கண்களிலிருந்து, நீர் தாரை தாரையாகப் பெருகிற்று.

"அம்மா! அழாதேயுங்கள். திக்கற்ற நிலைமையில் உயிரைக் கொடுக்க முயலுபவன் யோசனை யில்லாதவன். எனக்கு அந்த நிலைமை இல்லை. நான் யோசித்துத்தான் 'இவ்வளவு தானே' என்று சொன்னேன். நீங்கள் சொன்ன கதை உண்மை என்று தோன்றுகிறது. உங்கள் தம்பிக்கு யாதொரு ஆபத்தும் வராது. பயப்பட வேண்டாம்" என்றான் கோவிந்தன்.

"சரி, அப்படியானால் வேகமாய் நடவுங்கள். சீக்கிரமாய்த் தம்பியைத் போய்ப் பார்ப்போம்" என்றாள் நாகம்மாள்.

போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். போலீஸ் ஸ்டேஷனில் ஸப் இன்ஸ்பெக்டர் இல்லை. வரத் தாமதமாகும் என்று கீழ்ச் சிப்பந்திகள் சொல்லி விட்டார்கள்.

போலீஸ் ஸ்டேஷன் சிறைக்குள், கம்பிகளைப் பிடித்துக்கொண்டு, நாகம்மாளின் தம்பி சிங்காரம் நின்றுகொண்டிருந்தான். பேச ஆரம்பித்தான். "சுப்" என்றான் கான்ஸ்டேபிள் ஒருவன்.

"எஜமான் வருவதற்கு எவ்வளவு நேரமாகும்" என்றான் கோவிந்தன். "எங்களுக்கு ஆரூடம் தெரியாது" என்றான் "சுப்" கான்ஸ்டேபிள். "உன்னை ஆரூடம் கேட்கவில்லை. சாதாரணமாய், வருகிற வழக்கத்தைக் கேட்டேன்" என்றான் கோவிந்தன்.

"பெண் பிள்ளைப் பாசமோ, உன்னை மரியாதை யில்லாமல் பேசச் சொல்லுகிறது! யாரப்பா, நீ? வெளியே போ; இல்லா விட்டால் பிடித்துத் தள்ளுவேன்" என்றான் அதே கான்ஸ்டேபிள்.

"ஜனங்களின் நன்மைக்காக இருக்கும் போலீஸ்" என்று வாய் நிறைய, கோவிந்தன் சிரித்தான்.

கான்ஸ்டேபிளுக்குக் கண்களில் தீப்பொறி பறந்தது. "அடி முட்டாளே! வெளியே போ" என்று கோவிந்தனைப் பிடித்துத் தள்ளும் சமயத்தில், ஸப் இன்ஸ்பெக்டர் உள்ளே நுழைந்தார். கோவிந்தனுடைய தோளின் பேரில் இருந்த கான்ஸ்டேபிளின் கை, படீரென்று எஜமானனைச் சலாம் செய்தது.

"என்ன கலாட்டா" என்று ஸப் இன்ஸ்பெக்டர், கோவிந்தன் பக்கம் திரும்பிப் பார்த்தார். கோவிந்தனைப் பார்த்ததும், அவனை ஓடிப்போய்க் கட்டிக்கொண்டார். கோவிந்தன், ஸப் இன்ஸ்பெக்டருடைய காணாமற்போன சாதுத் தம்பி. "அப்பா, கோவிந்தா" என்று அவர் அலறினார். கான்ஸ்டேபிளோ, தனக்கு என்ன நேருமோ, என்று பதறிக் கொண்டிருந்தான்.

முடிவில், சிங்காரம் குற்றவாளியல்லவென்றும் அவன் உயிர்க் கொலையைக் காப்பாற்றத் துணிந்த வீரனென்றும் கோவிந்தனால் ருசுப்பிக்கப்பட்டு, நல்ல பெயருடன் அவன் விடுதலை பெற்றான்.

கோவிந்தனுக்கும் நாகம்மாளுக்கும் கலியாணமாக வேண்டியது கதைக்கு லட்சணம். ஆனால் அப்படி யொன்றும் நேரவில்லை. இனி நேர்ந்தால், தெரிவிக்கப்படும்.

"காணாமற்போன தம்பி காங்கிரசுடா" என்று எதிர் வீட்டுப் பையன் கத்திக்கொண்டு போனது, என் காதில் விழுந்தது.

சக்திக்கூத்து

காளிதாஸன்

திக்குக ளெட்டுஞ் சிதறித் திடுக்கிடக்
கெக்கலி கொட்டிடுவாள்
பொக்கென வோர்கணத் தேயண்டம் யாவையும்
பொட்டென வெட்டிடுவாள்
கக்குங் குருதிக் கடலினி லூழியின்
காற்றிற் குதித்திடுவாள்
நக்க பிரானுக்கு நாயகி பாவம்
நடுங்க நடித்திடுவாள்.

அண்டங்கள் யாவுங் குலுங்கிடக் கிண்கிணி
யாட்டங்கள் காட்டிடுவாள்
கொண்டல் நடுவிற் குளிர்ந்த மதிவைத்த
கோலம் விளக்கிடுவாள்
கண்டு மகிழ்ந்தவர்க் கின்ப வெறியிற்
கவிதை பொழிந்திடுவாள்
பெண்டு பிள்ளைகுட்டி யாவரும் வாழ்ந்திடப்
பேரருள் செய்திடுவாள்.

சட்டச் சடசடக் கொட்டு மிடிக்குரற்
சத்தத்தில் வீற்றிருப்பாள்
வெட்டி யடித்திடு மின்னல் வெறியினில்
மெட்டி மினுக்கிடுவாள்
துட்டர் பயப்படச் சிட்டர் களித்திடத்
தோத்திரம் பாடிடுவோம்
பட்டின் மெதுவுப் பதத்தினில் வீழ்ந்து
பரவச மெய்திடுவோம்.

ஸ்ரீயுத வ. வே. சு. அய்யர் எழுதிய
மங்கையர்க்கரசியின்
காதல் முதலிய கதைகள்
(தபாற்கூலி யுள்பட 10 அணா ஸ்டாம்பு)
சுதந்திரச் சங்கு காரியாலயம்,
திருவல்லிக்கேணி, சென்னை.

வான் சிறுமி

(குஞ்சு எழுதியது)

கேட் லீ அழகியவள். அமர்ந்து, அடங்கிய அழகிய முகம்; கருணை ததும்பும் தெய்வீகமான ஜோதி வீசும் கரு விழிகள்; அமைதியாய் மூடப்பட்டிருக்கும் உதடுகள்; இனிமையான இளநகை; அன்பின் ஊற்றுப்போல் ஆறுதலளிக்கும் பேச்சு. பரபரப்பே கிடையாது, பரம சாந்தத்துடன் பரம தெய்வீகமான பொறுமை பொங்க அவள் சேவை செய்துவந்தாள்.

ஏழைகட்கும், எளியவர்கட்கும், நோயாளிகட்கும், நொந்தவர்கட்கும் அவள் ஓர் வான் தேவதையாக விளங்கினாள். அவள் பார்வை அவர்களுக்குக் கடவுளின் கடைக் கண் பார்வை; அவளது பேச்சு வேதகானம்; அவளின் ஸ்பர்ஸம் மோட்சகதி. நொண்டி, குருடு, செவிடு, ஊமை முதலிய எல்லோரும் அவளது குழந்தைகள்.

அவளுடைய அழகே தனி விதம்; அது அள்ள அள்ளக் குறையாதது. மூக்கும், முழியும் மிக மிக அழகானவை என்றாலும், அவைகளின் அழகு அவளுடைய உண்மை எழிலின் ஒரு சிறு பாகமே யாகும். அவ்வபூர்வமான அழகின் ஊற்று அவளது உள்ளம். 'உள்ளத்தில் உண்மையொளி' உண்டானவள். ஆகவே அகத்தின் சைதன்ய அழகு முகத்திலே வீசியது.

ஏழை எளியவர்களை நேசிப்பது கடமை என்பதால் அவள் நேசம் காட்டவில்லை. 'அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்' என்றபடி அவள் அவர்களிடம் அன்பு கொண்டாள். கடமை கிடமை என்ற சிறு நினைவுகளுள் அவளுடைய அன்பு கட்டுப்பட்டதல்ல.

பெரிய மனிதர்கள், பணக்காரர்கள், படித்தவர்கள் இவர்களின் கூட்டத்தில் அவள் நிலத்திற் போட்ட தாமரை போல் வாடி வதங்கினாள். ஆடம்பரமான வாழ்வில் அவள் மூச்சுத் திணறினாள். ஆனால் துன்பத்தின் ஆழத்திலே, அளக்க முடியாத அதன் அடிப்படையான சேற்றுக் களறிலேதான் அவளுக்குத் திருப்தி ஏற்பட்டது. ஏன், உள்ளத்தில் அன்பும், உயிரில் ஏசுநாதரின் தியாக மலரும் சூடினவளாய் இவ்வான் சிறுமி விளங்கினாள். ஒரு முறை உயிரின் இன்பத்தைக் கண்டவனுக்கு இவ்வுலகத்தின் இன்பம் ஒன்றுமே யில்லையல்லவா?

லண்டன் நகரின் மிகக் கீழ்த்தரமான சாக்கடை மக்களிடையே அவள் கடவுளின் கருணை வெள்ளத்தைப் பாய்ச்சினாள். அங்கு அதற்கு முன் மரியாதையுள்ள எவரும் சென்றதில்லை. மாதா கோயில்கள் ஒன்றாவது அவர்களைச் சீர்திருத்த வேண்டுமென்று எண்ணியதில்லை. ஆரோக்ய ஏஜெண்டுகள் கூட அப்பாகத்தைப் பற்றிக் கவலைப் பட்டதில்லை. அவ்விடத்தில்தான் கேட்லீ வாழ்ந்தாள். வாயில் கடவுள் கானமும், கையில் எப்போதும், எவர்க்கும் உதவியும் பூண்டவளாய் அவள் ஒரு வான் தேவதையாய் விளங்கினாள்.

அவள் இறந்தபோது பல்லாயிரக் கணக்கான ஏழை மக்கள் கண்ணீர் ததும்பியவர்களாய் அவளது சவப் பெட்டியைப் பின் தொடர்ந்தனர். நரகத்திலே வானத்தைப் படைத்த இந்த நல்லுயிர், தேவனான பரம பிதாவின் பாதத்தில் ஓர் வாடா மலராகப் பூத்து விளங்கியது.

அன்பர்களே! நீங்களும் கேட் லீயைப் போல் இருக்க விரும்பவில்லையா? கோடிக் கணக்கான தீண்டாச் சகோதரர்கள் புழுப்போலத் துடிதுடித்துத் துன்பச் சேற்றில் நெளிகின்றார்களே, அவர்களது துன்பத்தைக் காணக் கண் கலங்குகின்றது; கருத்து உளைகின்றது. இதுதான் சமயம், நாமும் கேட் லீயைப்போல் சேவை செய்து பேரழகு பெறக்கூடிய தருணம். சேர வாரும் ஜகத்தீரே.

THE

3rd All India Khadi & Swadeshi Exhibition 1934

TRICHINOPOLY.

(To be opened on 1st July 1934)

100 SPACIOUS STALLS PROVIDED

SPECIAL ARRANGEMANTS FOR DEMONSTRATIONS.

Exhibit your Swadeshi Manufacture. *Join in the Various Competitions.*

HAVE A LOOK

At the various Articles from all parts of the Country, Maps, Charts, Photographs,

and Musical Instruments a Speciality.

Gold and Silver Medals and Certificates of Merit, will be awarded for deserving EXHIBITS AND THE WINNERS IN THE Various Competitions.

நாட்டுக் கல்வி

(யோகி)

ஓர் அடிமைத் தேசத்திற்கு, அதுவும் அத்தேசம் தனது அடிமைத் தன்மையை உணராமலிருக்கும் பொழுது, அதற்கு மிகவும் முக்கியமாக வேண்டுவது கல்வி. அக்கல்வி தானும் அடிமைகளையே அதிகமாக உற்பத்தி செய்வதாயிருப்பின் அதனினும் கேடு வேறொன்றுமில்லை. இவ்விரண்டு வாக்யங்களும் சரித்திரம் காட்டும் பச்சை உண்மைகள்.

இவ்வுண்மைகளைக் கொண்டு நமது நாட்டையும், நமது கல்வியையும் கணித்துப் பார்ப்போமாயின் ஒவ்வொரு இந்தியனின் நெஞ்சமும் துடிக்கும். ‘பள்ளிக் கணக்குப் புள்ளிக்குதவாது’ என்பதற்குப் பேரிலக்கியமாய் நமது நாட்டுப் பள்ளிக் கூடங்கள் விளங்குகின்றன. இன்றைக்குங் கூடக் கல்வியின் பயனை ரூபாய், அணா, பைசாக்களில் நமது தந்தைமார் அளப்பது வாஸ்தவமாயினும் செலவழித்த தொகையின் வட்டிக்குக்கூட வரும்படியில்லையே என்ற சொல் அவர்களில் பலர் வாயினின்றும் வெளிக்கிளம்பும் காலம் வந்து விட்டது.

‘அட ! கெடுவாய் பல தொழிலும்
இருக்கக் கல்வி
அதிக மென்றே கற்று விட்டோம்
அறிவில்லாமல்’

என்று பாடவேண்டிய என் போன்ற பயனற்ற படிச்காசுத் தம்பிரான்களுக்கும் பஞ்சமில்லை.

சரி ! நமது கல்வியால் செல்வ விஷயம் செல்வதிலேயே சென்று விட்டதென்று வைத்துக் கொள்வோம். செல்வமே நமக்கு வேண்டாம். அறிவு தருகிறதா ? ஆண்மை தருகிறதா ? உணர்வைக் கிளப்புகிறதா ? என்று பார்ப்போம். குடுமிக்குக் கயிறுகட்டி, உருப்போட்டு, மூளை குழம்பி, மறுநாளே மறந்து போகும் கிள்ளைப் பேச்சுக்கும் அறிவு என்ற சிறிய மூன்றெழுத்து வார்த்தைக்கும் சம்பந்தமே கிடையாது. ஆண்மையைப் பற்றியோ ஒரு படித்த பதினாறு வயது வாலிபனை அவனது மூக்குக் கண்ணாடியோடும், வாயில் சிகரெட்டோடும், கூனிய நடையோடும் கூடிய எலும்பு மனிதர்களை நினைவூட்டும் அற்புத தேகக் கட்டோடும் பார்த்தாலே போதும். நாம் ஒன்றும் சொல்ல வேண்டுவதே யில்லை. உணர்வு ! அப்படி யென்றால் என்ன ? அது காசுக்கெத்தனை என்று நமது மாணவர்கள் இன்னும் கேட்க ஆரம்பிக்க வில்லையே, அதுவே க்ஷேமம்.

தற்காலப் படிப்பு ஒன்றுக்கும் உபயோகமில்லை. இதனைக் கல்வி என்ற புனிதமான பெயரிட்டு அழைப்பதாயின் தாயுமானவரின் ‘கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்’ என்ற பெருமொழிக்குப் பரமார்த்திக விவகாரார்த்திக ‘ஆனால்’ ‘உம்’ முதலிய அடைமொழிகள் போடாமலேயே ‘அப்படமான’ உண்மை என்று கூறி விடலாம். உபயோகமே வேண்டாமய்யா. அது எக்கேடு கெட்டோ போகட்டும். நமக்குக் கெடுதலொன்றும் இக்கல்வி செய்யாதிருந்தாலே போதும். ‘குதிரை கீழே தள்ளியதுமல்லாமல், குழியும் தோண்டிற்றாம்’ என்றபடி ‘கல்வி’ என்ற அடிமை வர்த்தகத்தால் உம்மை அடிமைச் சரக்காக்குகிறோம் என்றால் நமக்கென்னவோ பொறுக்கவில்லை.

‘அவர்களுக்குக் குமாஸ்தாக்களும், என்ஜினீயர்களும் வேண்டும். ஆகவே அதற்கேற்ற கல்வியை அவர்கள் தருகின்றனர்’ என்றார் திலகமுனி. ‘ஒரு சாதாரண இந்திய மாணவனின் பேராசையின் உச்சம் ஒரு நியாயவாதியாக வேண்டும் என்பதுதான்.’ என்றார் விவேகாநந்தர். இவ்வடிமை வேலைகளாவது கிடைக்கிறதா ? அதுவும் இல்லை. ஒரு வேலை காலி ; ஓராயிரம் பி. ஏ. விண்ணப்பங்கள். இத்தகைய அடிமைப் படிப்பை விட்டு விடலாமென்றால் வீட்டில் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் கோபம். படித்த வரையில் பணமனுப்பும் தொல்லை ; பிறகு விண்ணப்ப மெழுதும் வேலை ; அதன் பிறகு ‘இல்லை’ என்ற பதிலைத் தொல்லையுடன் ஏற்றல். அதற்குள் காலைச் சுற்றி நாலு குழந்தைகள். பக்கத்தில் நகைப் பித்தம் கொண்ட மனைவி. பையன் பாடு ஐயனே கதி.

‘மாதா வயிறெரிய மஹேஸ்வர பூஜை’ செய்வதுபோல் இந்தியாவைப் பற்றி ௲ ௲,—இங்கிலாந்தைப் பற்றியோ ‘கி. மு. ஐம்பதாவது ஆண்டில்’—அதற்குமேல் எனக்கு ஞாபகமில்லை.—என்று பெரிய புராணப் பிரசங்கம் புரிவதற்கு நமது மாணவர்கள் கோஷ்டியில் பஞ்சமில்லை. கம்ப ராமாயணம் என்றால் பழங் கதை ; மில்டனின் ‘துறக்க வீழ்ச்சி’ (Paradise Lost) கவிதைக் களஞ்சியம். திருக்குறள்—அதைப் பற்றி மாணவர்கள் மூளையில் பூஜ்யம் ; ‘எம்பரர் மார்க்கஸ் ஏரீலியஸ் அன்டோனினஸ் பயஸ் (Emperor Marcus Aurilius Antoninus Pius) அவர்களது தியான மொழிகள் நீதி பொக்கிஷமென்பது யாவருக்கும் தெரியும். காளிதாசன் நாடகங்கள் எது என்றால் தெரியாது ; ‘ஜகப்ரியர்’ (Shakespeare) மாணவர்களின் ஜகத்தில் ‘பிரியரே’ யாவார். மில்டனும் மார்க்கஸ் அரீலியஸ௲ம், ஜகப்ரியரும் அற்புதமான மனிதர்களே ! ஆனால் தன் தோட்டம் எது என்று கூடத் தெரியாமல் அயலார் தோட்டத்தைக் கண்டு மகிழ்வதில் பயனில்லை என்பதே நாம் சொல்ல வந்தது.

நமது பால பாடங்களில் ‘அறஞ் செய விரும்பு’ முதலான ஔவைக் கிழவியின் பேச்சுக்கள் இப்போது மருந்துக்கூடக் கிடைப்பதில்லை. அதற்குப் பதிலாக “‘அ’ என்பது அத்திப்பழம்” என்றும் ‘காலில்லாதவன் நொண்டி, கண்ணில்லாதவன் குருடன்’ என்றும் அழகிய அறச் சூத்திரங்கள் இடங்கொண்ட மட்டுமே நிறைந்து கிடக்கின்றன. பிரஞ்சு முதலான ஐரோப்பிய நாட்டுப் பாடப் புத்தங்களிலோ நாட்டன்பு நல்லுரைகள் மிளிருகின்றன. சில உதாரணங்கள் தருகிறேன்.

‘தந்தையர் நாடென்றால் என்ன தெரியுமா ? அதுதான் நமது தாய் ; நம்மை இரு கையாலும் வாரி மகிழ்ந்த வீடு. நாம் களிப்போடு விளையாடிய தோட்டம். நமது முதல் பாடங்களைக் கற்றுக்கொண்ட பள்ளி. அது தான்

பிரஞ்சுக் கொடி பறக்கும் நகர மண்டபம். நமது மூதாதையர்களின் சமாதிக் கூடம். உங்கள் பெரியோர்கள் பாடுபட்டு வளர்த்த தோப்புத் துறவுகள். நீங்கள் ஏறியேறி இறங்கி மகிழ்ந்த குன்றுகளும் மலைகளும்' என்று ஒரு பிரஞ்சுப் பாலபாடம் கூறும்.

'பிரஞ்சு மக்களாகிய முப்பத்தேழு லக்ஷம் பேர்களும் ஒரே பிரஞ்சுக் குடும்பமாகும். அவர்கள் யாவருக்கும் ஒரே சரித்திரம், ஒரே களிப்பு, ஒரே நோக்கம். தங்கள் தாய் நாட்டின் வீழ்ச்சியில் அவர்கள் துன்பமுறுவர். அதன் வாழ்வில் இன்பமடையவர். நல்ல தாயினும் சரி, கெட்டதாயினும் சரி, நாட்டுக்காக அதனை ஏற்றுக்கொள்வர்' என்று மற்றொன்று கூறுகிறது.

மற்றொரு பிரஞ்சுப் பாடப் புத்தகத்தின் ஒரு பாடலை மொழி பெயர்த்துத் தருகிறேன்.

'மகனா யிருந்தெனக்கு மகிழ்வு செய்
ஆனால் யாவினும் முக்கியம்
யாதெனில்
எவற்றினும் பெரிதே இன்பப்
பிரான்சிடை
நீ கொளும் அன்பு.'

இத்யாதி எழுதிக் கொண்டே போகலாம். நம்முடைய கல்விப் புத்தகங்களில் இம்மாதிரி வாக்யக்களுக்கு இடமுண்டா? நிற்க.

'மனிதனது உள்ளத்தில் புதைந்திருக்கும் அறிவை வெளிப்படுத்துவது தான் கல்வி' என்று விவேகானந்தர் சொன்னார். 'உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்' என்பது பாரதியின் பாடல். (தொட்டனைத் தூறும் மணற்கேணி, மாந்தர்க்குக்; கற்றனைத் தூறும் அறிவு' என்பது வள்ளுவன் சாட்சியம். கல்வி யென்னும் பதம் கல் என்னும் தாதுவிலிருந்து பிறந்தது கல் என்றால் தோண்டுதல் என்று அர்த்தம் குப்பைக் கூளங்களை சாக்கடைத் தொட்டியில் நிரப்புவது போல் மூளைக்குள் ஜீரணிக்க முடியாத பல விஷயங்களைத் திணிப்பது கல்வியல்ல. உடல், உள்ளம், உயிர் முதலிய எல்லா உறுப்புகளும் தத்த்ம் முறையில் உண்மைகளைக் கண்டு பிடிக்க முயல்வதுதான் கல்வி. 'எஜுகேஷன்' என்ற ஆங்கில வார்த்தைக்குக்கூட இது தான் அர்த்தம். மனிதனுடைய சகல சக்திகளையும் வெளிப்படுத்துதல் என்று பொருள். நமது தற்காலக் கல்வியால் நம்முடைய ஒரேயொரு குணம் மட்டும் வெளியாகிறது; அது தான் நமது அடிமைக் குணம். கைக் கட்டல், வாய் புதைத்தல், பல்லிளித்தல், கெஞ்சுதல், வெளி வேஷம் போடல், தாஜாப் பண்ணுதல் முதலான அடிமையின் குணங்களெல்லாம் பள்ளி நீங்கிய மாணவர்களின் காபிரைட் குணமாக மாறி யிருக்கிறது. ஐயோ பரிதாபமே!

இனிமேலாயினும் இப்பொய்க் கல்வி மோஹினியிடம் நமது ஜனங்களுக்குள்ள மோஹம் ஒழியுமா? வெறுமே ஒழியுமா என்று கேட்பதில் பயனில்லை. வேறு நல்ல முறையான கல்வி எங்கிருக்கிறது? அக்கல்விக் கூடங்கள் எப்போது உண்டாகும். இந்தியாவின் ஒரு மூலையில் ஒரு சாந்தி நிகேதன் இருந்து விட்டால் போதுமா? ஊரூருக்கு ஒவ்வொரு சாந்தி நிகேதன் ஏற்பட வேண்டும். அப்போது தான் இந்தியா க்ஷேம மடையும்.

ஜீவ கலை

(தாகூர்)

[கவீந்திரனாகிய ரவீந்திரனை அறியாதாரில்லை. அவருடைய வசனங்கள் கூடக் கவிதை அழகோடு மிளிருகின்றன. அவைகளிற் சில துணுக்குகளைக் கீழே தருகின்றேன். அன்பர்கள் படித்து இன்புறுக. —காளிதாசன்.]

ஒரு ரோஜா மலரைப் பற்றி எனக்கு என்ன தெரியும் என்பதை நான் வெகு சுலபமான பாஷையில் சொல்லிவிட முடியும்; ஆனால் அம்மலரின் அழகுணர்ச்சியை அவ்வளவு 'லேசாக'க் கூறிவிட முடியாது. அங்கு விவரங்கள், சட்டங்கள் ஒன்றுமே கிடையாது; ருசியும், அனுபவமும் மாத்திரமே உண்டு. அது சொல்லுக் கடங்காத வஸ்து; அனுபவத்திற்கு மட்டுமே தென்படும். அதனாலேயே நமது ஸம்ஸ்கிருதக் கவிராயர்கள் கவிதை இன்பமயமான கற்பனைச் சித்திரங்களை மனக்கண் முன் வருவிக்கக்கூடிய பாஷையில் மட்டுமே எழுதப்பட வேண்டும் என்று விதி ஏற்படுத்தி யுள்ளனர்.

* * *

தினசரி வாழ்க்கையில், நம்முடைய சாதாரணக் காரியங்களில் நமது வார்த்தைகள் மிகவும் தயக்கமடைந்து நெளிய ஆரம்பித்து விடுகின்றன; ஏனெனில் நமது ஜீவ நதியின் ஓட்டம் அப்போது மிகவும் குறைந்திருக்கிறது. ஆனால் நம்முடைய இருதயம் காதலிலோ, மற்றப் பெரிய உணர்ச்சிகளிலோ பரிபூரணமாக விரிவடையும்போது ஜீவ ஓட்டம் பெரு வெள்ளமாகப் பெருக்கெடுத்து உருண்டோடுகிறது. அச்சமயத்தில் நம்மால் பேசாமலிருக்க முடியாது. பேச்சுக்காகவே பேச ஆரம்பிப்போம். இந்த கட்டந்தான் சர்வ கலைகளுக்கும் பிறப்பகம். 'கலைகள் காசு தருமா, கலைகளால் பயனென்ன?' என்ற கேள்விகளுக்கெல்லாம் அங்கு இடமில்லை. நம்முடைய உணர்ச்சிக் கோபுரங்கள் நட்சத்திரங்களை முத்தமிடத் தாவுகின்றன. நமது சங்கீத கானம் அளக்க முடியாத ஆழங்களையெல்லாம் அளந்து பார்க்கிறது.

* * *

என்னுடைய ஹிருதயம் காதலால் நிரம்பியிருக்கும் போது சூரியன் முன்னைக் காட்டிலும் அதிகமான ஒளியோடும், சந்திரன் முன்னைக் காட்டிலும் அதிகமான குளிர்ச்சியோடும் உலகத்தின் உயிரும் என்னுடைய உயிரும் ஒன்று என்று போதிப்பதை நான் பார்த்ததில்லையா. மேகங்களின் வருகையைப் பற்றி நான் பாடிய பொழுது தரையில் தத்தடிக் கொட்டும் மழை தனது சோகத்தின் சாயையை என்னுடைய பாட்டிலே கண்டது. மனித ஜாதியின் சரித்திரத்தின் ஆரம்ப காலத்திலே முதற்கொண்டு கவிஞர்களும், கலைஞர்களும் தங்களுடைய ஜீவ கலையை உலகத்தின் வாழ்க்கையில் போட்டு இழைத்துள்ளனர். இதிலிருந்து நான் ஒரு உண்மையைக் கண்டுபிடித்தேன். அதாவது வையமும் வானமும் மனித அறிவினாலேயே ஆக்கப்பட்டிருக்கிறது. இவ்வறிவுதான் பரம அறிவும். கடவுள் பாடுகிறார், பாட்டு அவருடையதுதான்; ஆனால் அந்தக் கற்பனை கீதங்களை வெளிப்படுத்துவது நமது ஹிருதயங்களாகிய குழல்கள்.

நிலவு

எனது அன்பான ராஜம்,

'என்ன எழுதுவது' என்ற உடைந்த விமானத்தில் ஏறி, 'ஏன் எழுதவேண்டும்' என்ற இருளடைந்த தேசத்திற்குப் போய்க் கொண்டிருந்தேன். "ஏன், என்னைப் பற்றி எழுதலாமே!" என்று புன்னகை தவழ்ந்த முகத்துடன் உள்ளே வந்தாள் நிலவெனுந் தேவதை.

"உன்னைப் பற்றியா?" என்றேன். என்னைக் கூர்ந்து நோக்கினாள். விழிகளில், கோடை இரவின் இனிமை ததும்பியது.

"ஆம்" என்று தலை யசைத்தாள்.

"உன்னைப் பற்றியா? உன்னைப் பாடிப் பரவசமடையாத கவிஞன் இல்லையே. உன்னைப்பற்றி எழுதக்கூடிய விஷயம் இன்னும் பாக்கி வைத்திருக்கிறார்களா?" என்று முனகினேன்.

நல்ல வெயிலில், நம்மூர் வெண்கலப் பொட்டலின் மார்பில் மேக நிழல் மெல்லப் பரந்து மறையுமே, அது மாதிரி, அவள் முகத்தில் சிந்தனை நிழல் படிந்தது. பேசினாள்:—

"கவிதையின் தன்மையை நீ அறியவில்லை. என்னைப் பற்றிக் கவிஞர் பேசியுள்ளதெல்லாம், என்னைப் பற்றியல்ல; அவர்களைப் பற்றியே. வாழ்க்கையில் என்னென்ன அனுபவித்தார்களோ, அவை யாவற்றையும் என்னோடு பிணைத்து விட்டார்கள். மனத்தில் எழுந்த அழகுணர்ச்சியால் எனக்கு மெருகிட்டு விட்டார்கள். உலகம் முடியும் வரையில், வாழ்க்கையில் மேன்மையும், அழகும், ஆகவே, தாழ்மையும், இழுக்கும், உள்ள வரையில், என்னைப் பற்றிப் பேச விஷயமுண்டு."

"புரியவில்லை" என்று தலையை ஆட்டிக்கொண்டே வெளியே நோக்கினேன். ஜன்னலுக் கிடப்பட்ட திரையென, மரமல்லிகைக் கிளையொன்று அசைந்தது; சோலைக்குள், ஆந்தை கீசியது. உலகத்தின் இனிமையெல்லாம் சேர்த்த கலவையைப் பூசிக்கொண்டு, தென்றல் மிதந்தது.

"புரியவில்லை" என்றேன்.

"கண்ணை மூடிக்கொள்" என்றாள் நிலவு.

* * *

கண்ணை விழித்த பொழுது நிலாத் தேவதையைக் காணோம். ஜன்னல், மரமல்லிகை, எனது அறை, எல்லாம் மாயமாய் மறைந்துவிட்டன. வேறெங்கேயோ இருப்பதாக உணர்ந்தேன்.

அகன்ற முற்றம். தாவள்யமான நிலவு. தாழ்வாரத்திலே, பாதி நிலவிலும், பாதி நிழலிலும், என் பாட்டி காலை நீட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். பக்கத்தில் கிடந்த மணைக்கட்டையை, சிறுமி ஒருத்தி உருட்டிக் கொண்டிருந்தாள். மெல்லக் காலைத் தடவிக்கொண்டு, பாட்டி பேசினாள்;

"பொண்ணே, ரங்கம், விஷமம் பண்ணுதேடி. ராமுவைப் பார்; சமத்தாய்த் தூங்கறான்."

"நான் சமத்தோல்லியோ, பாட்டி, அதான் தூங்கறேன்" என்றான் கண் சிமிட்டாமல் சந்திரனைப் பார்த்துக் கொண்டிருந்த என் தம்பி ராமு.

எவ்வளவு சின்னவனாக இருந்தான் அவன்! என்ன பரிசுத்தமான முகம்! தெளிந்த விழிகள்; பேசி முடிந்ததும், முகவாயைத் திருப்பி, உதட்டை முறுக்குவான்; அது ஒரு அழகாய் இருக்கும் அவனுக்கு.

"தூங்கறவனைப் பாரடா, தூங்கறவனை! தூங்கறவன் பேசுவனோ" என்று சிரித்தாள் அச்சிறுமி. பிறகு, மணைக் கட்டையைக் காட்டி,

"இங்கே பார்....என் குழந்தை பேசாமல் தூங்கறது" என்றாள்.

"நான் குழந்தையா பேசாமல் தூங்க? ஏன் பாட்டி, நீ சொல். புருஷா பேசிக் கொண்டு தானே தூங்குவா?" என்றான். பிறகு 'மணைக் கட்டை குழந்தையாம் டோய்!' என்று கூவி, ஒரே ஓட்டமாய் ஓடி, பாட்டியின் முதுகைக் கட்டிக்கொண்டு ஆட ஆரம்பித்து விட்டான்.

"விடடா, விஷமம் பண்ணுதேடா" என்றாள் பாட்டி.

"கதை சொன்னால்தான் விடுவேன்."

இதற்குள் சிறுமி, பாட்டியின் மடியில் படுத்துக்கொண்டு விட்டாள். ராமு முழங்காலைக் கட்டிய வண்ணம் நிழலிலே உட்கார்ந்தான். கதை ஆரம்பமாயிற்று.

"ஒரே ஒரு ஊரிலே...."

'உம்'

"ஒரு ராஜாவாம்"

'உம்'

"அவனு...."

தென்னை மரம் அபிநயம் பிடிப்பதையும், அதன் கிளைகளில் நிலா மின்னுவதையும், சிறுமி கவனித்துக் கொண்டிருந்தாள். பாட்டியின் மெல்லிய குரலும், கவிதை நிறைந்த பழங்கதைப் பேச்சும் காதில் விழுந்தன. என்னென்ன எண்ணங்கள், தீர்க்கமான உருவற்று, பனிபோல், சிறுமியின் மனத்தில் எழுந்தனவோ, அந்த நிலவிலே....

இதை எண்ணிக்கொண்டே திரும்பினேன். இப்போது வேறோர் இடத்தில் இருந்தேன். நம்மூர் சந்நிதித் தெரு. நிலவு; நிலவு; நிலவு. வீட்டோரமாய் நிழல், தெரு முழுதும் நீண்ட நிழல். இரண்டு மூன்று சிறுவர்கள், கோயில் மதிளருகில் நின்றுகொண்டு, 'குசு, குசு'வென்று பேசுகிறார்கள். தெருக் கோடியிலிருந்து, நிலாப் பாதையில் ஒரு சிறுமி வருகிறாள்.

'அதோ வந்து விட்டாள்' என்றான் நிழலில் நின்ற ஒரு சிறுவன்.

"ஸ்...பேசாதே" என்றான் இன்னொருவன்.

திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே, தயங்கித் தயங்கி அந்தச் சிறுமி வருகிறாள். வயது பத்திருக்கும். கோயில் கிட்டியவுடன், தணிந்து, சிறிது நடுங்கிய குரலில் "ராஜம்" என்றாள்.

பதில் இல்லை.

சிறுமி மெதுவாகக் கோயில் மதிளைச் சமீபித்தாள்.

"பே" என்று எல்லாச் சிறுவர்களும் கத்தினார்கள்.

'ஐயோ' என்று கீச்சிட்டுச் சிறுமி கீழே விழுந்தாள். படபடவென்று காலடிச் சத்தம் கேட்டது. அடுத்த நிமிஷம் இன்னொரு சிறுமி ஓட்டமாய் ஓடி வந்து சேர்ந்தாள்.

" ரங்கம், ரங்கம், எழுந்திரு. பயப்படாதே, இந்தப் பயல்கள் விளையாட்டுக்காக உன்னைப் பயமுறுத்தி விட்டார்கள்' என்று சொல்லிக் கொண்டே, வந்தவள் ரங்கத்தைத் தூக்கினாள்.

எழுந்து, நிலவில் உட்கார்ந்து

கொண்டே, ரங்கம் விம்மி, விம்மி அழுதாள். அவள் சிநேகிதைக்குக் கோபத்தால் முகம் ஜ்வலித்தது. சிறுவர்கள் நின்ற பக்கம் திரும்பினாள்.

"வெட்கமில்லையாடா உங்களுக்கு," என்பதுதான் அவள் சொன்னது. அதில் தொனித்த பெருமிதமும், கோபமும், பரிஹாஸமும், பச்சாதாபமும் சொல்லத் தரமில்லை.

"இல்லை, ராஜம், வெறுமே விளையாட்டுக்காக" என்று ஒருவன் ஆரம்பித்தான்.

"போதும், போதும், பேசாதே, போ!" என்று சொல்லி, ராஜம் தனது காலைக் கீழே தட்டிக் கொண்டு 'ராணி'யைப் போல் கையை வீசினாள். தலையைத் தொங்க விட்டுக் கொண்டு, சிறுவர் நிழலில் மறைந்தனர்.

"வா, ரங்கம், போகலாம். 'நிலாப் பூச்சி, நிழற் பூச்சி', ஆடலாம் வா. குட்டிகளெல்லாம் அந்தக் கோடியிலேன்னா இருக்கா! இங்கே யென்று யார் சொன்னது? போக்கிரிப் பயல்கள்!"

ரங்கத்தின் அழுகை நின்றது. சிறுமிகள் இருவரும் நிழலில் மறைந்தனர்.

மறுபடியும், காட்சி மாறியது. கிணற்றங்கரை. அதைச் சுற்றிலும் நிலா வட்டம். அப்பால் நிழலும், நிலவும் பின்னிய ரத்னக் கம்பளம்.

கொல்லை வாசற் கதவு 'கிரீச்' சென்று திறந்தது. பதினைந்து, அல்லது, பதினாறு வயதுள்ள பெண்ணொருத்தி வெளியே வந்தாள். மெல்ல நடந்து சென்று, கிணற்றருகில் இருந்த பாராங்கல் மேல் உட்கார்ந்தாள். கலைந்திருந்த கூந்தலையும், ஆடையையும் திருத்திக் கொண்டாள்.

கொல்லைப் புறமிருந்து, யாரோ வருகிற சத்தம். ஆம், யாரோ ஒருவர் வந்து கொண்டிருந்தார். வந்தவர் யாரென்று அறிந்தேன். என் கணவன்.

சரேலென எழுந்து வீடு நோக்கிச் செல்ல ஆரம்பித்தாள் அந்தப் பெண்.

"ரங்கம்" என்றழைத்தார் வந்தவர். பெண் நின்றாள்.

"என், என்னைப் பார்த்ததும் போகிறாய்?" ரங்கம் பதில் பேசவில்லை.

"என், என்னிடம் பேசமாட்டேன் என்கிறாய்?"

"பேசாமல் என்ன?" மார்பு படபடவென் றடித்துக் கொண்டது அவளுக்கு.

தனதிரு கைகளையும், அவள் தோள் மேல் வைத்து அவர் சொல்கிறார்:—

"உனக்குத் தெரியுமா, ரங்கம், எவ்வளவு தடவை உன்னிடம் பேச வேண்டுமென்று நினைத்து முடியாமற் போய் விட்டதென்று? நான் இங்கு வந்த நாளாய் அடுப்பங்கரையை விட்டு நகரமாட்டேன் என்கிறாய். தப்பித் தவறி வெளியே வந்தாலும், என்னைப் பார்த்ததும் ஓட்டம் பிடிக்கிறாய். நான் என்ன பூதமா?" என்று நகைத்து மெல்ல, ரங்கத்தின் தோளை அசைத்தார்.

குனிந்த தலையை நிமிர்த்தி, ஒரு கணம் அவரைப் பார்த்தாள்.

"இல்லை" என்றாள்.

"என்ன இல்லை?"

"பூதமில்லை". மந்தகாச நகை.

"பின் என்ன?"

மறுபடியும் ரங்கம் அவரை நோக்கிப்பின் தலைகுனிந்தாள். அவர், தோளினின்று கையை எடுத்துவிட்டு,

"பின் என்னவென்று சொல்' என்றார். ரங்கத்தின் பார்வை அவர் விரல்களை நாடிச் சென்றது. "என்ன சொல்வது, என்ன சொல்வது........ எப்படிச் சொல்வது" என்று திரும்பத் திரும்ப மனத்துள் கேட்டுக் கொண்டு நின்றாள்.

"ரங்கம்!" என்று, பெண் குரல் வீட்டிலிருந்து எழுந்தது.

"அம்மா கூப்பிடுகிறார், நான் வரேன்."

"நான் கேட்டதிற்குப் பதில்?"

ரங்கம் மறுமுறை தனது விழிகளை உயர்த்தினாள். அதான் 'பதில்.' பிறகு ....

* * *

'நான் சொன்னது புரிந்ததா' என்றாள் நிலாத் தேவதை.

என் கண் மூடியபடி இருந்தது. என் பாட்டியும், தம்பி ராமுவும், என் சிநேகிதை ராஜமும், என் கணவனும், நிலவொளியில் மாறி மாறித் தோன்றி மறைந்தனர்.

என்னென்னவோ விதமான அற்புத எண்ணங்களும், உணர்ச்சிகளும், என்னுள் அலையலையாய் எழுந்து நிலவிற் கலந்தன. நிலவைப் பற்றி உலகம் உள்ள அளவும் கவிஞர் பாடுவார்கள் என்பது உண்மைதான். நிலவைப் பற்றி மாத்திரமா? மனித வாழ்க்கை இயங்கும் நாடக அரங்கான அண்டத்தின் ஒவ்வொரு அம்சத்தைப் பற்றியும் பேசிக்கொண்டுதான் இருப்பார்கள். நிலவோடு, மனித உள்ளத் தழகையும், உணர்ச்சிகளையும் குழைத்த அமுதமல்லவா கவிஞர் நிலவு என்று நினைத்தேன்.

"என் பதிலில்லை...தூங்குகிறாயா?" என்றாள் நிலவு....

* * *

"தூங்குகிறாயா?"

கண்ணைத் திறந்தேன். என் கணவன் என்னருகில் நின்றுகொண்டு,

"என், தூங்கினாயா, ரங்கம்?" என்றார்.

வெளியிலே பட்டப் பகல் போன்ற நிலவு. ஜன்னலருகில், அந்த மரமல்லிகைக் கிளை இன்னும் அசைந்து கொண்டிருந்தது. பக்கத்து வீட்டுத் தோட்டக்கார ராமன் குடிசையிலிருந்து அவன் கரகரத்த குரல் எழுந்தது:—

"தென்னலடிக்குது, என்னை மயக்குது
தேன் மொழியே முத்துவீராயி"

என்னைப் பார்த்துக் கேலிச் சிரிப்பொன்று சிரித்தார் என் கணவன்...

எத்தனை அழகடி, இந்த உலகத்திற்கு; இருந்தும், எத்தனை துயரமடி!

உன் அன்புள்ள,
ரங்கம்.

மகாத்மா காந்தி எழுதியவை

	ரூ.	அ.	பை.
இல்லறமும் பிரும்மசரியமும்	0	6	0
மகா தியாகம்	0	4	0
அனசக்தி யோகம்	0	4	0
ஹிந்து தர்மம்	0	2	0
கீதா போதனை	0	2	0
உத்தம வாழ்க்கை	0	2	0
ஆரோக்கிய வழி	0	4	0
நீதி தர்மம்	0	2	0
சத்திய சோதனை முதற் பாகம் ...	1	8	0
சத்திய சோதனை இரண்டாம் பாகம்	2	0	0

சுதந்திரச்சங்கு புத்தகசாலை,
திருவல்லிக்கேணி, சென்னை.



ஆனந்த லஹரி

(பிக்ஷு)

ஜில்லென்ற வெகு மனோகரமான மாலை நேரம். துறைமுகத்தில் கப்பல்கள் நுழைவதுபோல் மேகங்கள் வானில் வந்துகொண்டிருந்தன. நான் கடைத்தெருவில் சுற்றிக் கொண்டிருந்தேன். கல்யாணக் காலமல்லவா? கூட்டம் கூட்டமாகக் கவலைப்பட்ட கல்யாணக்காரர்கள் போய்க்கொண்டிருந்தனர். சிலருக்குச் சவப் பார்வை, சிலருக்குச் சவ நடை. நான் மட்டும் கட்டின்றி, கவலையின்றி மகாராஜனைப் போலிருந்தேன். எனக்கென்ன கவலை? என் மனமோ பாழடைந்த மடத்தைப்போல் சூன்யமாய், சோம்பல் கணிகையின் மார்பின் மீது படுத்துக் கிடந்தது. திடீரென்று ஒரு எண்ணம் பிறந்தது. "தமஸின் தேகத்திலிருந்து பூர்ண சைதன்யத்தில் அவசமாவது எப்படி?" என்று எண்ணி முடியுமுன் ஒரு உருண்டை லேகியம் வயிற்றுக்குள் போய்விட்டது...............?

இரவு மணி ஒன்றிருக்கும். என் உடலின் ஒவ்வொரு அணுவிலும் ஏதோ ஒரு நெருப்பு வெள்ளம் பரவி என்னை விழிப்பித்தது. படுக்கையினின்று எழுந்திருந்து பார்த்தேன். எனக்கு எலும்பே இல்லை; எல்லாம் எரிந்து சாம்பலாகி யிருந்தது. வெறும் சாக்கைப் போன்ற தோல் உறைதான் பாக்கி. கண்கள் நெட்டிபோல் மிதக்கவே, வெளியே பார்த்தேன். பூர்ணசந்திரன் பெரிய வண்ணத்திப் பூச்சிபோல் பறந்துகொண்டிருந்தான்.

ஒரு கணம் சென்றது. உள்ளத்தின் அறிவு-விழி சுடர் வீசிற்று. என் ஜிவசக்தியில் தீவிரமான உணர்ச்சி பொங்கிற்று. இருந்தாற்போலிருந்து, பறக்கத் தெரியாத பட்சிக் குஞ்சு சிறகுகளை அடித்துப் பதறி விழுவதுபோல் துயரமென்னும் மாளிகையின் படிக்கட்டில் ஏற ஆரம்பித்தேன். ஆ! என்ன முட்டாள்தனம்! எவ்வளவு சக்தியற்றது இம்மனம்! எவ்வளவு பயங்கொள்ளி நான்!—என்பன வற்றை யெல்லாம் உணர்ந்தேன். உணர்ந்து என்ன பிரயோஜனம்? உடம்புக்கு ஒன்றும் வந்துவிடவில்லை. கட்டை என்னவோ கண்முன் கிடக்கிறது. ஒரு நாளும் இப்பொழுது சாகப்போவதில்லை என்ற நிச்சயம். இவ்வளவும் எதனால் வந்த வினை என்றும் நன்றாய்த் தெரியும். இருந்தாலும், ரக்தாசாயத்தின் ரேசக பூரகங்கள் ஒவ்வொன்றின் போதும் என்னுள் "குபு குபு" என்று வெப்பம் நிறைந்தது; மனவேதனையும் சொல்லொணாத் துயரமும் என்னை ஆட்சி கொண்டன.

இவ்வளவு சம்பிரமங்களுக்கிடையில் என் அறிவு நுட்பமாகிக் கொண்டே வந்தது எனக்கு ஆச்சரியமா யிருந்தது. வெகு ரகசியமான தத்துவங்களும் நுணுக்கங்களும் தெளிவாய் விளங்கின. எதிர்காலம், இறந்தகாலம் என்ற இரண்டு ஞாபகங்களும் மறைந்து நிகழும் நிமிஷத்தை ஜாஜ்வல்லியமாக்கின. இடம், வெளி என்ற உணர்ச்சி மாறி மாறி மங்குவதும் பிரகாசிப்பதுமா யிருந்தது. திடீரென என் உடல் சுழன்றது. நான் தனியனாய்—கேவலம் ஆத்மாவாய்—நின்றேன்!

சாதாரண காலங்களில், உடல் வேறு 'நாம்' வேறு என்பதை நாம் உணருவதில்லை. அவைகளுடைய இரட்டைத்தன்மைத் தினசரி செய்யப்படும் கர்மத்தில் மறைந்துவிடுகிறது. ஆனால் அப்பொழுதென்றால், எனக்குள்ளிருக்கும் சிவனார், வெறும் சாட்சி மாத்திரமாக நின்றுகொண்டு, நந்திதேவன்—என் உடம்புதான்!—தவிக்கும் தவிப்பைப் பார்த்துக் கொண்டிருந்தார். உடம்போ, கோடை காலத்தில் பறக்கும் இலவம் பஞ்சுபோல் மிதந்து கொண்டிருந்தது. இரட்டைகள் தெளிவாய்ப் பிரிந்து நின்றது சற்றுத் தமஷாயிருந்தது.

பின்னொரு விஷயம் அறிந்தேன். "அறிவே சக்தி" என்று சொல்லுகிறார்களே அது சுத்தப் பிசகு. உணர்ச்சிக்குப் பிணைக்கப்படாத அறிவு வெறும் ஊமை. பிணம் அணிந்திருக்கும் நகையை ஒக்கும். அப்படிக்கில்லை யென்றால், என் உடம்பு சாகவில்லை யென்ற நிச்சயக்ஞானமிருந்தும் நான் வாதனைப்பட்டதற்கு வேறு என்ன காரணம்தான் கூறலாம்?

நான் சொன்னதுபோல், இந்த 'இரட்டைகள்' பெரும் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தன. தன்னை விறட்டிவரும் வேட்டை நாயைக் கண்ட முயல்போல் தவித்தேன்.

"அப்பா! இந்தச் சங்கடத்தை எப்படியடா ஒழிக்கப் போகிறோ"மென்று பிரார்த்துக் கொண்டிருந்தேன். கண்களை மூடிக் குப்புறப் படுத்துக்கொண்டேன். என் கற்பனைகளும் எண்ணங்களும் சூரியனைக் கண்ட வெளவால்கள் போல் மறதி என்னும் மரக்கிளையை நாடின. ஆனால் அவைகளுக்குப் பதிலாக ஒரு வெகு விசித்திரமான சப்தத் தொடர்ச்சி காதில் விழுந்தது. முதல் சப்தத்தைக் காட்டிலும் இரண்டாவது பலம். இரண்டாவதைக் காட்டிலும் மூன்றாவது இன்னும் பலம். இப்படியே போய்க் கொண்டிருந்தது. என்னவென்று யோசித்ததில் என் ஹிருதயத்தின் ஒலிதான் அப்படி மரம் வெட்டுபவன் போல் சப்தம் செய்தது என்று உதயமாயிற்று. என்னென்ன விசித்திரம் ஈச்வர சிருஷ்டியில்!

மறு கணத்தில் தேகம் ஒரு புள்ளியைப் போலாகி விட்டது. அதுகூடச் சரியல்ல. என் தேகமே விரிந்து முடிவற்ற வெளியுடன் கலந்து போயிற்று. ஹா—ஹா—ம்! அதுவும் பிசகு! தேகமே காணாமற் போய்விட்டது, போதாதா? "அடியைப் பிடியடா பாரதா பட்டா" என்றபடி பழைய திகில்களும், பயமும், துயரமும் திரும்பி வந்துவிட்டன. எனக்கு இன்னது செய்வதென்று தெரியவில்லை. சுற்றுமுற்றும் பார்த்தேன். கோணா மாணா என்ற எண்ணங்கள் எழுந்தன. "கிணற்றங்கரைக்குப் போய் பிரும்மானந்தமாய் ஸ்நானம் செய்துவிட்டு வரலாமா? அல்லது ஞாயிற்றுக் கிழமை இரவு ஹோட்டல் 'தாட்' எங்கேனும் கிடைக்குமா? அல்லது இந்தத் துன்பத்திரையையும், குரூரமான பரவசப்படுதாவையும் சுருட்டித் தள்ளக்கூடிய புத்திசாலி டாக்டர் ஒருவரேனும் ஊரில் கிடை

யாதா?" என்று பலவாறு எண்ணிக் கொண்டிருந்தேன்.

துயரத்தில் கொஞ்சம் இடைவெளி கண்டது. அம்மாவைக் கூப்பிட்டுப் பிள்ளையின் யோக்யதையைப் பற்றி வெகு வினயமாய்ச் சொன்னேன். "அப்பா நல்ல காரியம் செய்தாய்! என்று சொல்லித் தாயார் என்னை அணைந்து கொண்டாள். தாயின் ஸ்பர்சம்பட்ட மாத்திரத்தில் பயம், திகில் அவ்வளவும் தோல்வி யுற்று ஓட்டம் பிடித்தன.

அதற்குப் பிறகு நாங்களிருவரும் திறந்த மாடிக்குச் சென்றோம். சந்திரன் புழுதி படிந்த வெள்ளி ஜகடை போல் உருண்டு கொண்டிருந்தான். காற்று மரங்களுக்கிடையில் நோயாளியைப் போல் முனகிக் கொண்டிருந்தது. உடலும் ஆத்மாவும் நன்றாயின. என் மனோ சக்தியும் நடு நிலமையும் திரும்பி வந்தன. என் அறிவுச் சுடர் நடுங்காமல் எழுந்தது. என்னவோ தோன்றிற்று. தாயாருடன் விக்ரஹ ஆராதனையைப் பற்றி வாதம் தொடுத்தேன். சிறிது நேரம் பேசிவிட்டு "வாஸ்தவம் தானப்பா, தேவையில்லை" என்று ஒப்புக்கொண்டாள். அப்பொழுதிருந்த மனோ வேகத்தில் எப்பேற்பட்ட பண்டிதர், எப்பேர்ப்பட்ட விஷயத்தைப்பற்றி என்னுடன் வாதாடி யிருந்தாலும் என் தாயாரின் கதிதான். அவ்வளவு தெளிவும் சாதுர்யமும் என்னிடம் விளங்கிற்று............!

வாதத்தின் வெப்பம் காட்டாற்று வெள்ளம்போல் குறைந்தது.

சுற்றுமுற்றிலும் நிம்மதியான மனத்துடன் பார்த்தேன். மேகங்கள் கலைந்திருந்தன. உஷக்காலத்தில் ஊஞ்சலாடும் காற்று இன்பக் கதை சொல்லிக் கொண்டிருந்தது. ஆனல் முன்போலில்லாமல், ஆற்று மணலில் கிடக்கும் ஒத்தை ரூபாயைப் போல், நீலவானில் சந்திரன் பிரகாசமாய்க் கிடந்தான். உதய ஜோதியைப் பார்த்து 'வந்தே' என்றேன்.

Have your Majestic
FIGURE
A
R. DASEN STUDIO.
The Best
AND MOST UP TO DATE STYLES FINISH
ELECTRIC
PHOTO
ARTISTS
No. 55 RATTAN BAZAAR ROAD MADRAS
STUDIO HOURS 8 A.M to 8 P.M

பொறுமை

(குகப்ரியை)

நீங்கள் பத்திரிகைகளுக்குக் கதையோ, கட்டுரையோ எழுதுவதானல் 'பொறுமை' என்பது அபரிமிதமா யிருக்கவேண்டு மென்று உங்களுக்குத் தெரிந்திருக்கும். இருந்தாலும் புதிதாய் எழுதத் தொடங்குபவர்களுக்கு என் சங்கதியைக் கூற வேண்டுமென்று வெகுநாளாய் ஆவல்.

என் தாயார் பொறுமையின் அவதாரம். ஆனல் அப்பாவுக்கு கோபம் வந்துவிட்டால் 'எருமை' என்றுதான் கொஞ்சலாய்க் கூப்பிடுவது வழக்கம் ஒன்றையே அலுப்பு, சலிப்பு என்பதில்லாமல் திரும்பத் திரும்பச் செய்வதில் என் தாயாருக்குச் சமானம் ஒருவருமே யில்லை. நான் சிறு பையனாய் ஐந்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் பொழுதே அம்மா எனக்குப் 'பொறுமை'ப் பாடத்தைக் கற்பிக்க ஆரம்பித்து விட்டாள்.

அம்மாவுக்கு ஒழிந்த வேளைகளிலெல்லாம் ஏதேதோ எழுதி வைப்பாள். அவைகளை ஓயாமல் ஒவ்வொரு பத்திரிகைக் காரியாலயத்துக்கும் அனுப்பி வைப்பாள். ஆனல் ஒன்றாவது வெளிவராது. என்றாலும் அவள் எழுதிய முந்நூறு கட்டுரைகளில் மூன்றரையே அரைக்கால்தான் பிரசுரிக்கப்பட்டன. எஞ்சிய காலேவீசம் ஆசிரியரது கத்தரிக்கோலுக்கிரையாயிற்று. மற்றவைகள் கூடைக்கு-அல்லது நாகரிகமாய்க் கலைமகளின் பாதத்தையே அடைந்திருக்கும். ஆனாலும் 'முயற்சியுடையார் இகழ்ச்சி யடையா, ரென்று கூறி எழுதத் தொடங்கிவிடுவாள்.

தபாலில் அனுப்புவதானல் கூட எனக்குக் கவலையில்லை. உள்ளூரிலேயே பத்திரிகாலயம் இருந்துவிட்டதோ? கேட்கவே வேண்டாம். என் பாடு அம்பலந்தான்.

முக்கியமாய் என் தாயாரின் சில வாடிக்கைக்காரர்களைப் பற்றி உங்களுக்குச் சொல்லிவிட்டால் மற்றதை நீங்களே யோசித்துக் கொள்ளுவீர்கள்.

நெ. ஒன்று. அவல்காரப் பாட்டி.

அவள் பெயர் போளூர் சுந்தரம்மாள். அவளிடம் என் காதுக் கடுக்கனை ஐந்து ரூபாய்க்கு அடகு வைத்திருந்தாள். கடந்த நான்கு வருடங்களாக அவளிடமேதான் அவலும், அப்பளமும் வாங்குவது வழக்கம். என்று கடுக்கனைக் கையில் வாங்கிக் கொண்டாளோ, அதற்கு மறுநாள் முதல் கண்டால் ஓடிவிடுவாள். வீட்டு விலாசம் தெரியும். அங்கே போனல் எங்கேயோ போயிருக்கிறாள் என்பார்கள். அவள் வீட்டுக்கு நான் செருப்புடன் நடந்திருந்தால், ஒரு ஜோடி தேய்ந்து போயிருக்கும். ஆனாலும், "இன்றைக்கு லீவு தானே? அந்த அவல்காரப் பாட்டியைக் கொஞ்சம் பார்த்துவிட்டு வாயேன்" என்று கூறத் தயங்குவதில்லை. கொஞ்சமென்ன?

இரண்டாவது. அய்யர் அண்டு கம்பெனி.

அவர்கள் புஸ்தக வியாபாரிகள். விளம்பரத்திற்காக ஏதோ ஒரு பத்திரிகை. வருடக் கடைசியில் பன்னிரண்டு இதழ்களையும் ஒன்றாக அச்சிட்டு விடுவார்கள். அதில் என் தாயார் நளவீம பாக சாஸ்திரம் என்னும் சுயம்பாக போதினியை வெளியிடுவதன் பொருட்டு மாதம் ஒரு சமையலைப் பற்றி என்னிடம் எழுதிக் கொடுத்து ஆசிரியர் வீட்டிற்கே அனுப்புவாள். அதில் உயிரெழுத்து வருக்கம் முடிந்து உயிர்மெய் தொடங்கும்பொழுது மெய்யாகவே என் உயிரை வாங்கிவிட்டார் ஐயர்.

கத்தரிக்காயும் காராமணியும் சேர்ந்த குறைப்புளிக் குட்டைக் குழம்பு என்பதைப் பற்றி எழுதியதில் முன்பின் முரணாக வாக்கியங்களை மாற்றிவிட்டாரென்றும், அதனல் குழம்புக் குட்டிச்சுவராகி விடுமென்றும் ஒரு பெரிய பிரசங்கம் செய்து, "மூடமே! இத்தனை பெரிய பிள்ளைக்கு இதைச் சொல்லக்கூடத் துப்பில்லையே. நீயும், துப்புக் கெட்டவன், குறிமட்டை. அந்தப் பத்திரிகாலயத்து............

எங்கள் ஸரஸா

(ப்ளுகோஸ்)

எங்கள் ஸரஸா ரொம்பப் பிடிவாதக்காரி. வீட்டில் அவள் வைத்ததுதான் சட்டம். அப்பா, நீ இன்னிக்கு எங்கேயும் போகக்கூடாது!" என்று சொல்லிவிட்டால் என் தகப்பனார் உட்கார்ந்த விடத்தைவிட்டு நகரக்கூடாது. நகர்ந்தால் கிராமபோன் மிஷினுக்குச் சாவி கொடுத்தாற் போல் அழ ஆரம்பித்து விடுவாள். அதட்டினாலும் அடித்தாலும் அழுகை அதிகமாய் விடும். பயமும் நயமும் அவளிடம் பலிக்காது. வீணாக அவளை அழ விடுவதைவிட நாங்கள் அவள் சொல்லிய படியே கேட்டு நடப்பது வழக்கம். என், ஆறு வயதுச் சிறுமியின் இஷ்டப்படி வீட்டில் எல்லோரும் ஆடுவதென்றால்........? என்ன செய்வது, வயது வளர வளரப் பிடிவாதம் தானாகவே குறைந்து போகுமென்று எண்ணியிருந்தோம். ஆனால் பிடிவாதம் வளர்ச்சியில் வயதை வென்று விட்டது.

"என்டீ, ஸரஸா, இப்படி அசடு மாதிரி பிடிவாதம் பிடிச்சு அழறயே! நாளைக்கு கல்யாணமாகி ஆம்படையானாத்துக்குப் போனால் அங்கே இப்படி அழுதால் மாமியார் தலையிலே இடிப்பாளே என்ன செய்வே! பொம்மனாட்டிக்கி இருந்தாலும் இவ்வளவு பிடிவாதம் கட்டோடே கூடாது!" என்றாள் என் தாயார்.

"மாமியார் இடிச்சாக்க நானும் மாமியாரை இடிக்கறேன்! எனக்குமட்டும் அவளைப்போலெக் கையில்லேன்னு நினைச் சுண்டெட்டையோ?" என்றாள் ஸரஸா.

"ஹூம், ஆமாம்! உன்னை சும்மா அப்படி இடிக்க விட்டுடுவாளாக்கும்! ஆம்படையானண்டே சொல்லி அடிக்கச் சொன்னாக்க?"

"அடிச்சா அழறேன்! நான் என்ன ஊமையாக்கும்!"

"ஊம்! அழத்தான் தெரியும். வேறென்ன தெரியும் உனக்கு?"

"ஆமாம்! நீ மட்டும் அழறதில்லையோ? நான்தான் அழறேனோ?"

"உன்னைப் போலே நான் எப்ப அழுதேன்?"

"பொய் சொல்றயே! அன்னிக்கி, அப்பா வெசாளே அப்போ நீ அழல்லே! அப்பாவை வேணும்னு கேட்டுப்பாரு!" என்று சொல்லிக்கொண்டே அப்பாவிடம் ஓடினாள். அவர் எழுதிக்கொண்டிருக்கையில் மேஜையை ஆட்டவே மைக்கூடு கீழே விழுந்து உடைந்துவிட்டது. முன்கோபம் எங்கப்பாவிற்கு உடன்பிறந்த சகோதரன். ஒரு அடியும் ஸரஸாவை அடித்துவிட்டார். போதுமா! ஹூம், உடனே ஸரஸா பாட ஆரம்பித்துவிட்டாள். மைக்கூடு போனாலும் போறது ஏண்டா அடித்தோமென்றாய் விட்டது அவருக்கு.

அதற்குமேல் அவள் திட்டியதைச் சொல்ல முடியாது.

மூன்றாவது. ஆசாரி சீனு.

அவனிடம் எந்த வேலையைக் கொடுத்தாலும் வருவதற்கு குறைந்தது மூன்று வருடம் செல்லும். நான் கேட்கும் பொழுதெல்லாம் "இதோ கையிலிருப்பது உங்கள் வேலைதான். நாளை சாயரக்ஷை நாலு மணிக்குக் கட்டாயம் கொடுத்து விடுகிறேன்" என்பான். அதைச் சுவற்றில் எழுதி வைக்க வேண்டியதுதான். சாயங்காலம் பள்ளிக்கூடத்திலிருந்து வந்தவுடன், "அடே, அந்த ஆச்சாரியைப் பார்த்தாயா? கொடுத்து ஒரு யுகமாகிறது. கலியுஞ்சு த்ரேதாயுகம் பிறக்கவேணும். இதை வாங்கிவிடு. இனிமேல் இந்தத் தட்டார வியவகாரமே வேண்டாம். இந்தத் தடவை வாங்கித் தொலை. மகராஜன் பட்டணத்தில் ஷாப்புக்கென்ன பஞ்சம். இனிமேல் திருகாணி வேண்டுமானால் கூட ஷாப்பிலேதான் வாங்கவேண்டும். இவன் வீட்டிற்கு வாரம் நடப்பதைவிட கோயிலுக்குப் போனாலும் புண்ணியமுண்டு" என்ற பிரசங்கம்.

நான்காவது. இடியட் சீதா.

பாவம்! அவள் நல்லவள்தான். தலை மிகவும் சிறியதாகையால், அவள் கோஷ்டியார் அவளுக்கு மாங்காய்த் தலைச் சீதாவென்றும், இடியட் சீதாவென்றும் சங்கேதப் பெயரிட்டிருந்தனர். அவள் புத்தகம், எம்ப்ராய்டரி வேலைச் சித்திரங்கள், ஊசிச் சட்டம் முதலியவைகளை இரவல் வாங்கிப் போவாள். மற்றவைகளைக் கொடுத்துவிட்டாலும், புத்தகங்களை மட்டும் பத்து நடை நடவாமற் கொடுத்ததே கிடையாது. இந்தப் பரதேவதையின் வீட்டிற்குப் போகாமல் கடவுள்தான் காப்பாற்றவேண்டும்.

ஐந்தாவது.இஸ்மேல் ராவுத்தன் என்னும் தையற்காரன்.

அவனிடம் பங்குனி மாதத்திலேயே துணியைத் தைக்கக் கொடுத்தால்தான் நவராத்திரிக்குள் தைத்துக் கொடுப்பான். 'ஆவணி மாதம் கொடுத்துவிட்டு, கொலுவுக்குள் கொடுக்க வேண்டுமென்று கண்டிக்கத் தெரியவில்லை. மூடம்! பீச்சுக்குப் போகும்பொழுது பார்த்துச் சொல்லி விட்டுப் போ! என்ன செய்கிறது. எல்லாம் வந்து வாய்த்ததே நமக்கென்று. இந்த அவஸ்தைக்கு ஒரு கைமெஷின் வாங்குங்கோன்னா கேட்கமாட்டார் உங்கப்பா, என்று பெருமூச்சு விடுவாள்.

இந்தச் சமயத்தில் அப்பா வந்துவிட்டால், "என் இந்த மாதிரி வேலைகளில் தலையிட்டுக்கொண்டு குழந்தைகளின் பிராணனை ஒட்ட (கொஞ்சங்கூட மீதியில்லாமல்) வாங்குகிறாய்" என்று கூச்சலிடுவார்.

"இல்லேன்னா! உங்களுக்குத் தெரியாது. இதிலெல்லாம் பட்டுப் பட்டுத் தேறினால்தான் வேலைக்கு மனுப் போடுகிறதற்கும், பத்திரிகைகளுக்குக் கட்டுரை எழுதுவதற்கும் வேண்டிய பொறுமை ஏற்படும். இல்லாவிட்டால் கோடியகத்துக் கோமதிப் பிள்ளை கோபு வாரத்துக்கு நூறு "அப்ளிகேஷன்" எழுதறானே. பொறுமையில்லாமல் முடியுமா?"

முடியுமா? முடியாதா? நீங்களே சொல்லுங்கள்.

"ஸரஸா, என்னை வேணுமானால் பதிலுக்கு அடித்துவிடு! ஏன் அழறே!"

"ஏன்....ஊம்....அடிச்சே!"

"மைக்கூடை உடைச்சே, அடிச்சேன்."

"மைக் கூடைன்னு...அ...டிக்....கணம். எ...ன்...னை...யே...ன்...ஊம்! ஊம்!!"

"சரி, இப்ப என்ன செய்யணம்கிறே. சொல்லு!"

"குஞ்சலாடு தந்தாத்தான்!"

"குஞ்சலாடுக்கு இப்ப எங்கே போறது? சாயங்காலம் பண்ணித்தரச் சொல்றேன்! அழாதே யிரு!"

"பின்னே ஏன் அடிச்சே?"

"அடிச்சாக்க....?"

"அப்படித்தான் குஞ்சலாடு தரணம்!"

சாயங்காலம் செய்து கொடுப்பதாய் எவ்வளவு சமாதானம் கூறியும் அவள் அழுகையை நிறுத்துவதா யில்லை. கிளப்பிலிருந்து குஞ்சாலாடு வாங்கிக் கொண்டு வந்து கொடுத்ததும் அழுகை எப்படித்தான் மாயமாய் மறைந்ததோ அது ஸரஸாவுக்கு மட்டும்தான் தெரியும்.

மற்றொருநாள் வீதியில் விளையாடப் போனவள் பிரமாதமாகப் பிரலாபித்துக் கொண்டே உள்ளே வந்தாள்.

"ஏண்டீ! என்ன வந்துடுத்து? யாராவது அடிச்சாளா? இந்தக் கழுதைகளோடே விளையாடாதேன்னு எத்தனைதரம் சொல்லியிருக்ரேன்! ஐயோ, குழந்தை மூச்சுத் திணரி விம்மிவிம்மி யழறதே! கண்ணேன்னே, உன்னை யார் அடிச்சா சொல்லு!" என்று பரிதாபக் குரலில் கேட்டாள் என் தாயார். ஸரஸாவா உடனே கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்கிறவள்! ஹூம், ஆரம்பித்த அழுகையை ஒருவாறு ஆலாபனம் செய்து முடித்து விட்டல்லவா பதில் சொல்வாள். என் தாயார் மறுபடி மறுபடி கேட்க, "அந்த மொட்டச்சி கமலாவோ குமலாவோ அவளை அடிச்சாத்தான்!" என்று சொல்லிக் கொண்டே ஆலாபனத்தை இரண்டு கட்டைக்கு மேல் தூக்கினாள்.

"கமலா உன்னை என்னடீ பண்ணா?"

"நீ அடிக்கறயா மாட்டையா?"

"அடிக்கறேன்! என்ன பண்ணாள்?"

"அடிச்சாத்தான்!"

"எதுக்காக அடிக்கணம் சொல்லேன். அவள் என்ன பண்ணாள்?"

"என்னோடே ஏன் "ஆனைமேலே குதிரை மேலே 'டு' விட்டாள்!"

"ஏண்டி இதுக்குத்தானா இவ்வளவு அழுகை?" என்று நகைத்தாள் என் தாயார். அவள் சிரிக்கவும் அழுகை அதிகமாயிற்று. கமலாவை அடிக்காவிடில் அழுகை நிற்காது என்று எங்களுக்கு நன்றாய்த் தெரியும். அதற்காகக் கமலாவைக் கூப்பிட்டு அவளுக்குக் கொஞ்சம் பலகாரம் கொடுத்துவிட்டு அவளை அடிப்பதுபோல் முதுகில் கையை வைத்துச் சப்தம் பண்ணிவிட்டனுப்பினோம். அவளும் அழுவது போல் அழுது கொண்டே ஓடிவிட்டாள். பின்புதான் ஸரஸாவின் அழுகை ஒருவாறு நின்றது.

"அவளுக்குக் குஞ்சலாடு கொடுத்தையே எனக்குக் கடயாதோ? அவ மாத்திரம் ஒசத்தியாக்கும்"

"சரி, தரேன் அழாமலிரு!"

ஸரஸா சாகஸம் செய்வதென்றால் எங்களுக்கு அவ்வளவு பயம். ஏனென்றால் கிராமபோன் சாவி யில்லாவிட்டால் நின்றுவிடும். ஸரஸாவோ அப்படியில்லை. அதுதான் அவள் சொல்லியபடி வீட்டில் எல்லோரும் ஆடுவதின் ரகஸியம்!

உப்பிலிருக்குது சூட்சமம்

'சுண்ணாம்பிலிருக்குது சூட்சமம்' என்பது பழமொழி. இப்போது உலகச் சர்வாதிகாரச் சூட்சமம் உப்பிலிருப்பதாகக் கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது. திரு. எல். சி. ஹாம்ஸ்டெட் என்பவர். 'எவ்வெரி படீஸ் வீக்லீ'யில் ஆகார வகைகள் குணாதிசயங்களை மாற்றும் விதத்தைப் பற்றி எழுதி யிருக்கிறார். அதில் சில விநோதமான முடிவுகள் கூறப்பட்டுள்ளன.

1. காந்தியடிகள் மாம்ஸம் சாப்பிட ஆரம்பித்தால் இந்தியாவின் சிக்கல்கள் பெரும்பாலும் ஒழிந்துவிடலாம்.

2. மாம்ஸம் சாப்பிடுபவர்கள் தேகதிடனும், சுறுசுறுப்பும் உடையவர்கள்; எனினும் அவர்கள் பிடிவாதமுடையவர்களல்ல. விவாதம் செய்வதற்கு அவர்கள் எப்போதும் தயாராய் இருந்தாலும் அம்மாதிரியே அறிவாராய்ச்சிகளைப் பற்றி மௌனமாய்க் கேட்கவும் தயாராய் இருக்கின்றனர்.

3. உப்பு ஒருவருடைய குணத்தை விருத்தி செய்வதில் மிகவும் முக்கியமானது. முசோலனியும், ஹிட்லரும், ஸ்டாலினும் உப்பில்லாமல் உணவு கொண்டார்களாயின் தங்களுடைய சர்வாதிகாரத் தன்மையை இழந்து விடுவார்களா? இழந்துவிடலாம். ஏனெனில் உப்பில் மூளையை விருத்தி பண்ணும் தைராய்ட் கிளாண்டை வளர்த்தும் ஐயோடின் சத்து இருக்கிறதாம்.

காந்தியடிகள் மாம்ஸம் சாப்பிடுவதென்பது இந்த ஜன்மத்தில் இல்லை. அவர் தம்முடைய கொள்கைகளைத் தளர விடுவதும் சாத்யமில்லை. ஆகவே அதைப் பற்றி நமக்கு அக்கரை கிடையாது. காந்தியடிகள் பகுத்தறிவுக்கு முரண்பட்டுப் பிடிவாதமாய் இருப்பதாகத் ஹாம்ஸ்டெட் குறிப்பிடுவதுதான் ஆச்சரியமா யிருக்கிறது? அறிவுக்கடாத மூடப் பிடிவாதம் பிடிப்பது காந்தியா? அரசாங்கமா? எத்தனை முறையோ காந்தி சமாதானத்திற்குத் தயாராயிருந்தும் அரசாங்கந்தானே அவரது சமாதானத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. ஒரு வேளை மாம்ஸம் அதிகார வர்க்கத்தாரிடம் ஒரு மாதிரியும் மற்றவர்களிடம் வேறு மாதிரியும் வேலை செய்யுமோ என்னவோ?

இந்தியாவின் துயரங்களுக்குக் காரணம் காந்தியல்ல; அரசாங்கமே. ஆகவே அரசாங்கந்தான் கொஞ்சம் தாராள புத்தி காட்டவேண்டுமே தவிரக் காந்தியல்ல. மாம்சத்தை வேண்டுமாயின் அரசாங்கம் இன்னும் கொஞ்சம் அதிகமாகச் சாப்பிட்டுக் கொள்ளட்டும்.

முசோலனியும், ஹிட்லரும் ஸ்டாலினும் உப்புச் சாப்பிடாமலிருக்க ஒப்புக் கொள்வார்களோ என்னவோ நாம் அறியோம். எனினும் உப்பை அவர்கள் தங்கள் ஆகாரத்திலிருந்து நீக்கிவிடின் சர்வாதிகாரத்வம் ஒழிந்து போகும் என்பது மலை கெல்லி எலி பிடிக்கும் வாதம் என்று எமக்குத் தோன்றுகிறது.

கடைசியாக நமது ஆசிரியர் சரியான மூளையோடு உண்மையாகவே இவ்வாறு எழுதுகிறாரா? அல்லது தற்காலத்துத் தமிழ்நாட்டு விகடப் பத்திரிகைகளின் சரடுபோல் கொஞ்சம் சரடு திரிக்கிறாரா? சரடு என்பதுதான் சரியென்று நமக்குத் தோன்றுகிறது.

கால் நடை யாத்திரை

[பகவான் புத்தன், சங்கரன் முதலிய மகான்களைப்போல் காந்தியடிகளும் தம்முடைய ஹரிஜன யாத்திரையைக் கால் நடையாகவே செய்ய ஆரம்பித்து விட்டார். இவ்வாறு அவர் தீர்மானிக்க வேண்டிய காரணங்களை 'ஹரிஜன்' பத்திரிகையில் தெரிவிக்கிறார். அதன் ஒரு பகுதியைக் கீழே தருகின்றோம்.]

கூடிய வரையில் பாக்கியிருக்கும் ஹரிஜன யாத்திரையைக் கால் நடையாகவே நடத்தவேண்டும் என்னும் எண்ணம் எனக்குத் தினே தினே அதிகமாய்க்கொண்டே வருகிறது. தமிழ்நாட்டு யாத்திரைத் திட்டம் தயாரிக்கப்பட்ட போது, அனுமதிக்கப்பட்டுள்ள குறுகிய காலத்துக்குள் பல ஊர்களையும் சேர்க்கவேண்டும் என்று தாக்கூர் பாபாவும், டாக்டர் ராஜனும் நிர்ப்பந்திக்கப்பட்டனர். அப்போதே நான் என்னுடைய கொள்கையை அவரும் ஒப்புக் கொள்வதாயின் பழைய திட்டத்தைக் கைநழுவ விட்டுவிட்டுக் கால் நடையாகவே கிராமத்திற்குக் கிராமமாக மீதிப் பிரயாணத்தையும் செய்ய விரும்புவதாய்த் தாக்கூர் பாபாவிடம் கூறினேன். பின்னர் இவ்வெண்ணம் திரும்பவும் என் மனத்தில் உதித்தது; அதுவும் தியோகர் சம்பவத்திற்குப் பிறகு உடும்புப் பிடிபோல் பிடித்துக் கொண்டது. ஹிம்சை முறையில் போவோர்களெல்லாம் விரல் விட்டு எண்ணிவிடக்கூடிய சிறுபான்மையோர்கள் என்பது எனக்குத் தெரியும். எனினும் மிகமிகக் கொஞ்சமானவர்கள்கூடப் பொதுக் கூட்டங்களைக் கலைத்துவிட முடியும். அத்தகையோர்களுக்கும் இவ்வியக்கம் மத சம்பந்தமானதென்று நிரூபிக்க விரும்புகிறேன். மத சம்பந்தமாக ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகையால் இதன் முடிவுகளும் மத சம்பந்தமானவையே. வேகமான பிரயாணத்தால் மட்டுமே இவ்வியக்கம் பரவ முடியும் என்பது தப்பு என்பதையும் எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறேன். நான் ஆகாயக் கப்பலில் யாத்திரை செய்ய வேண்டும் என்ற யோசனை சொல்லப் பட்டபோது, அக்கணமே அதை நான் நிராகரித்தேன். வெறுமே பண வசூலுக்காக மட்டுமே இந்த யாத்திரை ஆரம்பிக்கப்பட்டதாக ஒருவரும் நினைக்கக்கூடாது. நான் கால் நடையாகப் பிரயாணம் செய்தாலும் இவ்வியக்கத்திற்கு அவசியமான ஆண்களும், பெண்களும், பணமும் கிடைக்கும் என்று நான் உறுதியாய் நம்புகிறேன். நான் சொல்ல விரும்பும் செய்தி உண்மையில் என் ஹிருதயத்தின் அடிப் பீடத்திலிருந்து கிளம்புவதென்றால் ரயிலிலே, மோட்டாரிலே போவதைக் காட்டிலும் கால் நடை மூலமே அதிகமாகப் பரவும் என நம்புகிறேன்.

தவிர, ஜனங்களின் அசாத்யமான கூச்சலை—அக் கூச்சல் என்னைப் பார்ப்பதால் உண்டான அன்பாலும் ஆனந்தத்தாலும் பிறப்பதெனினும்—கேட்டுக் கேட்டு எனக்கு அலுத்துப் போய்விட்டது. அவைகள் என்னுடைய நரம்புகளைத் தாறுமாறாய்க் குலுக்குகின்றன. இப்போது என்னுடைய நரம்புகளோ அவைகளைத் தாங்க முடியாத அத்துணை பலஹீனமாய் இருக்கின்றன. தினே தினே அப்படியும் இப்படியுமாக அலைக்கழிக்கப் படுவதையும் என்னால் தாங்க முடியவில்லை. ஆயிரக் கணக்கான ஜனக்கூட்டங்கள் என் பக்கமாகச் சாய்வதும், அக்கூட்டத்தால் எனக்கு ஆபத்து நேராவண்ணம் தொண்டர்கள் மிகக் கஷ்டத்தோடு அவர்களைத் தடுப்பதும் இவ்வெளிய சரீரம் சகிக்க முடியாத காட்சியாகப் போய்விட்டன. கூச்சலிலும், கூட்டத்திலும் யாதொரு பயனும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. என்னுடைய பாதத்தைத் தொட வேண்டுமென்ற ஆசை என்னுடைய உடலுக்கு ஆபத்துண்டாக்கி விடுமோ என்று தோன்றுகிறது. எனது காலில், பாதத்தைத் தொட்டுக் கும்பிடவரும் ஜனங்களின் நகக்கீறல் படாத நாளே அபூர்வம்.

கூச்சல், கூட்டத்தின் அமளி, காலைத் தொட்டுக் கும்பிடுதல்-இவைகள் ஒன்றும் கூடாதென நான் எவ்வளவோ மறுத்துக்கூட ஒரு நிரந்தரமான பயனை என்னால் உண்டாக்க முடியவில்லை. அங்கங்கே என் பேச்சைக் கேட்டவர்களிடையே ஓரளவு பயனுண்டாயிருக்கிறதென்பது வாஸ்தவம். முன்னைப் போல் மைல் கணக்கில் வேகமாகப் பிரயாணம் செய்வதானால், இத்தகைய நல்ல சந்தர்ப்பங்கள் கிடைக்க வழியில்லை. தவிர, ஒரு பகலுக்குள் மூலைக்கொரு ஊராக இரண்டு மூன்று ஊர்களைக் கடக்கவேண்டி நேருகிறது.

நான் சொல்லும் செய்தியின் உண்மையான தத்துவம் ஜனங்களுடைய மனதில் ஊறிப் போகவேண்டுமாயின் மௌனமாய்க் காது கொடுத்துக் கேட்கக்கூடிய கூட்டங்களுக்குத் தான் அதை உபதேசிக்க முடியும். மத தத்துவங்கள்—ஏன், எந்தத் தத்துவமாய் இருந்தாலும் அமைதியான, தியான பரமான கூட்டங்களிடையே தான் பயன் தரும்.

[திரும்பவும் காந்தியடிகள் இவ்விஷயத்தைப் பற்றிக் கஞ்சம் வாசிகளுக்கு இம் மாதம் 12-ம் தேதி ஒரு செய்தி அனுப்பியுள்ளார். அது வருமாறு:]

பாக்கியுள்ள ஹரிஜன யாத்திரையை நான் கால்நடையாகவே நடத்தத் தீர்மானித்தது அங்குள்ள ஹரிஜன ஊழியர்களுக்கும், நான் கட்டாயம் வருவேன் என்று எண்ணியிருந்த பல ஊரார்களுக்கும் கஷ்டமாயிருக்கும் என்பது எனக்குத் தெரியும். ரயிலிலோ, மோட்டாரிலோ, மட்டும் போகக்கூடிய ஊர்களெல்லாம் இப்போது அடிபட்டுப் போய்விட்டன. இவ்வியக்கத்தின் மத சம்பந்தமான உண்மையை நிரூபித்துக் காட்டவே பழங்காலத்து முறையாகிய கால் நடைப் பிரயாணத்தைக் கைக்கொண்டேன். இப் பண்டைக் காலக் கர்நாடகப் பிரசார முறையைப் பாராட்டி, நான் சில கிராமங்களுக்கு மட்டுமே போக முடிந்தாலும் ஒரிஸ்ஸாவின் எல்லாக் கிராமங்களுக்கும் ஆத்மார்த்தமாகப் போய் வந்ததாக உணர்வீர்கள் என்று நினைக்கிறேன். ரயிலிலோ, மோட்டாரிலோ சென்றபோது கூட இவ்வித உணர்ச்சி அவசியமாயிருந்தது. ஆன்மார்த்த வளர்ச்சிக்கு வேகம் பெரும்பாலும் விரோதமானதே. ஆன்மார்த்த தத்துவங்கள் இயற்கையான எளிய பிரயாண முறைகளினாலேயே பயனுள்ளவாறு போதிக்கப் படுகின்றன. ஆகவே நான் கூறிய மானசீகப் பூரணத்வ நினைவு கால்நடைப் பிரயாணத்தால் இன்னும் சுலபமாகப்

போய்விடுகிறது. மணி ஒன்றுக்கு 50 மைல் வேகத்தில் ஓடும் ஒருவனைக் காட்டிலும் கால்நடையாகப் போகும் ஒருவன் அதிகமாக ஜனங்களின் மனதைக் கவர்ந்துவிட முடியும்.

ஒரிஸ்ஸா மாகாண ஹரிஜன ஊழியர்களும், கிராம வாசிகளும் என்னுடன் மனப்பூர்வமாக ஒத்துழைப்பார்களாயின் பழைய பிரயாணத் திட்டத்தைக் காட்டிலும் இப்புதிய கால் நடைத் திட்டத்தால் அதிகமான பயன் விளையும் என்று நான் நிச்சயமாய் நம்புகிறேன். பழைய திட்டம் கொடுக்க முடியாத பலனெல்லாம் இப்புதிய திட்டம் கொடுக்க முடியும். என்னுடைய சகோதர ஊழியர்கள் சிலர் நான் இப்புதிய முறையைக் கைவிட்டு விடவேண்டுமென்று கூறினர். ஆனால் அவர்களது வாதங்கள் என் மனத்தை மாற்ற முடியவில்லை. பூரியில் நண்பர்களுடன் கலந்து, இடைவிடாத பிரார்த்தனைக்குப் பிறகு செய்யப்பட்ட முடிவை விட்டுவிட நான் தயாராயில்லை. நீங்கள் இப்போதும் பழைபபடி யாத்திரை செய்யச் சொல்லுவீர்களாயின் என்னை ஒரு யந்திரம்போல் உணர்ச்சியின்றி நடக்கச் சொல்லுவதாகும். இப்பிரயாணத்தில் என்னோடு ஒத்துழைக்க விரும்புவோர் ஹரிஜன் சேரிகளில் தெரு, கிணறு, குளம் முதலியவற்றைச் சுத்தம் செய்யுங்கள்; முனிசிபாலிடிகளை ஹரிஜன சார்பாக ஊழியஞ் செய்யப் பண்ணுங்கள்; எங்கெங்கு எல்லோருடைய சம்மதத்தின் பேரிலும் கோயில்களை ஹரிஜனங்களுக்குத் திறந்துவிட முடியுமோ, அங்கெல்லாம் திறந்து விடுங்கள்; பண வசூல் செய்து அனுப்புங்கள். முன்னமேயே பண வசூல் நடந்திருக்கும் இடங்களில் நான் வருவதில்லையே என்ற காரணத்தால் கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேட்டால் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். என்னுடைய பிரயாணத் திட்ட வகையில் பழைய வசூல் பணத்தில் ஏதாவது அவசியமான செலவு செய்யப்பட்டிருப்பின் அதுவும் வேண்டுமென்றால் திருப்பித் தரப்படும். ஆனால் என்னுடைய புதிய தீர்மானத்தை உண்மையில் பாராட்டி, கொடுத்த பணத்திற்குக் கொஞ்சம் கூடக்கூட்டி அதிகமாய்ப் பண வசூல் செய்யப்படும் என்ற நம்பிக்கையுடனிருக்கிறேன்.

எல்லாரும் நடவுங்கள்

(மகாத்மா காந்தி)

அகில இந்தியாவும் என்னுடன் செயலில் ஒத்துழைக்க வேண்டும். இதுவே எனது வேண்டுகோள். அகில இந்தியாவிலும் உள்ள ஹரிஜன ஊழியர் ஒரு காரியம் செய்யவேண்டுமென்பது என் விருப்பம். அந்தந்த மாகாணங்களில் ஏககாலத்தில் கால்நடை யாத்திரைகள் நடத்த, அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டும். ஹரிஜன் இயக்கச் செய்தியை இதன் மூலம் ஜனங்களுக்கு உபதேசம் செய்யலாம். நான் நேரே வந்தால் ஜனங்கள் என்னிடம் கொடுத்திருக்கக் கூடிய காசு பணங்களைக்கூட வசூல் செய்து எனக்கு அனுப்பிவிடலாம்.

ஹரிஜன ஊழியர், ஹரிஜனங்களுடன் இன்னும் நெருங்கிப் பழகவேண்டும்; சனாதனிகளிடம் அதிக நட்பை வளர்த்துக் கொள்ளவேண்டும். தாங்கள் நேரே சென்று பார்க்கும் கிராமங்களிலுள்ள ஹரிஜனங்களின் கஷ்டங் குறைகளை நன்றாய் உணர்ந்துகொள்ள வேண்டும். அதிகக் கோயில்கள் திறக்கப்படவேண்டும்; அதிக ஹரிஜனக் குழந்தைகள் பொதுக் கலாசாலைகளில் சேர்க்கப் பெறவேண்டும்.

உத்கல் கிராமங்களில் நான் நடந்து கொண்டிருக்கிறேனல்லவா? இதனாலேயே தத்தம் கிராமங்களிலேயும் நான் நடப்பதாக ஊழியரும் கிராம வாசிகளும் கருத வேண்டுகிறேன். எனது செயல் பாரமார்த்திகமானதாயின், ஜனங்களுக்கு இவ்வியக்கத்தில் தாங்கள் பலமான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற உணர்ச்சி உண்டாக வேண்டும். இந்தப் புண்ணிய யாத்திரையின் பலனாக, புதிய புதிய ஊழியர் வெளிவர வேண்டும்; உள்ள ஊழியர் இயக்கத்தில் பின்னும் அதிக ஊக்கத்துடன் ஈடுபடவேண்டும்.

—'ஹரிஜன்'.

வ. வே. சு. அய்யர் எழுதிய

குருகோவிந்த சிங்கன்

தபாற்கூலி யுள்பட 5 அணு ஸ்டாம்பு அனுப்பவும்.

சுதந்திரச்சங்கு புத்தகசாலை,
திருவல்லிக்கேணி, சென்னை.

ராம் மோஹனுடைய

வட இந்தியா யாத்ரா ஸ்பேஷல்

1934-ம் வருஷம் ஜூலைமீ
30உ

சென்னையைவிட்டுப் புறப்படும்
கீழ்க்கண்ட இடங்களுக்குப் போகும்

கால விவரம்.

31	துங்க பத்ரை.
ஆகட்ஸ் 1, 2	பண்டர் பூர்.
3, 4	நாசிக் (பஞ்சவடி த்ரயம்பகம்)
5, 6, 7,	பம்பாய்.
8	ப்ரோச் (நர்மதை).
9	பரோடா.
10	டாகோர் (ஸ்ரீ கிருஷ்ண துலாபாரம்.
11	உஜ்ஜயினி (அவந்திகா).
12, 13	அஜ்மீர் (புஷ்கரம்).
14	ஜெயப்பூர்.
15	ஆக்ரா.
16, 17	மதுரா, பிருந்தாவனம், கோகுலம், கோவர்த்தனம்.
18, 19	டெல்லி.
20	குருக்ஷேத்திரம்.
21,22,23,24	ஹரித்வார், ரிஷிகேஷ்.
25	அயோத்தி, நந்தி கிராமம்.
26, 27	பிரயாகை (திருவேணி, அலஹாபாத்.)
28,29,30,31, செப்டம்பர் 1	ஸ்ரீ காசி.
2, 3	கயா.
4, 5, 6	கல்கத்தா.
7, 8	பூரி, ஜெகன்னாத்
9	சிம்மாசலம்
10	ராஜமஹேந்திரம் (கோதாவரி).

செப்டம்பர் 11உ

மதராசுக்குத் திரும்பி வரும்.

சார்ஜ்கள் :—

மூன்றாவது வகுப்பு ரூ. 95
இரண்டாவது வகுப்பு ,, 235

மற்ற விவரங்களுக்கு எழுதவும்.

ராம் மோஹன் கம்பெனி,
21, செகண்டு லேன் பீச்சு, மதராஸ்.

'கோட்டை முற்றுகை'

(டாக்டர் அன்ஸாரியின் வேண்டுகோள்கள்)

பத்திரிகைகளுக்கு விடுத்த ஒரு அறிக்கையில் சுயராஜ்யக் கட்சியின் தலைவர் டாக்டர் அன்ஸாரி கூறுவதாவது:—

காங்கிரஸ் ஆதிக்கமே

"அலுவல், கொள்கை, திட்டம் இந்த எதிலும் சுயராஜ்யக் கட்சி காங்கிரஸினின்றும் பிரிந்த தனிக் கட்சியாக நடக்கப் போவதில்லை. காங்கிரஸ் வகுக்கும் வழியில் அதன் ஆதிக்கத்துக்கு உட்பட்டே நடக்கவேண்டுமென்று சுயராஜ்யக் கட்சி விதிப் புத்தகத்தின் முதல் விதியே நியமித்திருக்கின்றது.

சுயராஜ்யக் கட்சி

"காங்கிரஸ் குறிப்பிட்ட ஒவ்வொரு காரியத்துக்கும் தனியான விசேஷ சபைகளை அமைக்கலாம். அப்படி அமைக்கும் சபைகளை யெல்லாம் கண்காணிக்கவும் கட்டுத் திட்டத்துக்குட் படுத்தவும் மேற்பார்வை செய்யவும் அகில இந்தியக் காங்கிரஸுக்கு ஏராளமான அதிகாரங்கள் உண்டு. ஆனால் விசேஷ சபைகள் அன்றாடம் நடத்த வேண்டிய வேலை முறைகளில் அவற்றிற்குச் சுதந்திரம் வேண்டும். இந்தச் சுதந்திரத்தைத்தான் சுயராஜ்யக்கட்சி விரும்புகிறது. சுயராஜ்யக் கட்சி காங்கிரஸின் வேலைகளுக்கு இடையூறு செய்யப் போவதில்லை; காங்கிரஸ் செய்யவேண்டிய எல்லா வேலைகளையும் தானும் செய்து கொண்டிருக்கப் போவதுமில்லை. காங்கிரஸ் செய்யும் வேலைகளுக்கு உதவியாகவே சுயராஜ்யக் கட்சி அலுவல் புரியும்.

115 பேர் தான் வேண்டும்

"இந்தியச் சட்டசபைத் தேர்தலில் போட்டி போடத் தற்பொழுது நமக்கு 115 காங்கிரஸ் வாதிகளுக்குமேல் தேவையில்லை. இவர்களில் எத்தனை பெயருக்கு ஜயம் கிடைக்கும் என்பது, லட்சக்கணக்கா யிருக்கும் காங்கிரஸ் வாதிகள் செய்யும் வேலையைப் பொறுத்ததாயிருக்கிறது; வாக்காளரிடமும் தேசத்திலும் அந்த லட்சக்கணக்கான காங்கிரஸ் வாதிகள் உண்டாக்கும் உணர்ச்சியைப் பொறுத்தும்தான் இருக்கிறது. இந்த லட்சக்கணக்கான காங்கிரஸ் வாதிகளும் தங்களுடைய பிரசார வேலைகளுக்கும் ஆக்க வேலைகளுக்கும் இடையே காங்கிரஸ் அபேட்சகர் தேர்தலில் வெற்றி பெறுவதற்காகவும் உதவி செய்யவேண்டும்.

வித்யாசம் உண்டு

"1923-ம் வருஷத்திய சுயராஜ்யக் கட்சிக்கும் இன்று புதுப்பிக்கப்பெற்ற சுயராஜ்யக் கட்சிக்கும் பெரும் வித்யாச மிருக்கிறது என்பது வாஸ்தவந்தான். பழைய அனுபவங்களிலிருந்து நாம் படிப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். மாறுதல் வேண்டியவர் வேண்டாதவர் இரு தரப்பாருக்கும் இடையே அநாவசிய வாக்குவாதங்களெல்லாம் செய்து கொண்டிருக்கக் கூடாது என்பதை நாம் நன்றாய் உணர்ந்து விட்டோம்.

அவசர நிலைமை

"அகில இந்தியக் காங்கிரஸின் விசேஷக் கூட்ட மொன்றைக் கூட்ட வேண்டுமென்று சொல்லுவோருக்கு ஒரு விஷயத்தை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்தியச் சட்டசபைக்கு அடுத்த நவம்பரில் தேர்தல் நடக்கும்போல் தோன்றுகிறது. ஆகையால், இப்பொழுது முதலே ஒரு நிமிஷத்தைக்கூட வியர்த்தம் செய்யாமல் நாம் வேலை செய்யவேண்டி யிருக்கிறது. என்ன முடிவாகப் போகிறதோ என்ற சந்தேகத்துக்குத் துளி இடம் வைத்தாலும், அந்தச் சந்தேக நிலைமையை, மற்றவர்கள் தங்கள் தேர்தல் பிரசாரத்துக்கு உபயோகப் படுத்திக்கொண்டு விடுவார்கள். உடனே நமது அபேட்சகர்களை நியமித்து விடவேண்டும்; அவர்களுக்கு இப்போதிருந்தே காங்கிரஸின் பூரண ஆதரவையும் அளிக்க வேண்டும். முடிவு செய்யாமலிருந்தால் எதிரிகள் அதை உபயோகம் செய்து கொள்ளப் பார்ப்பார்கள்; அதற்கு இடமே கொடுக்கக் கூடாது. காங்கிரஸ்மீது இருக்கும் தடையைப் பாட்னாக் கூட்டம் முடிந்த உடனே சர்க்கார் நீக்கிவிட்டாலும் கூட, செப்டம்பர் மாதத்துக்கு முன் அகில இந்தியக் காங்கிரஸ் கூடுவது சாத்தியமில்லை.

தாமதம் விபரீதம்

"அவசர நிலைமைகளைச் சமாளிக்க, அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக்குப் பூரணமான தகுதியும் உண்டு. இப்போதைய நிலைமை அவசர நிலைமையே யாகும்; தாமதம் செய்யக் கூடிய நேரமல்ல. ஆகையால், பாட்னாவில் கூடவிருக்கும் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் கூட்டமே உறுதியான ஒரு முடிவை ஏன் செய்யக்கூடாது? இந்த மாதிரி விஷயங்களில் தாமதமாய் முடிவு செய்வதனால் மிகவும் விபரீதமான பலன்களும் தோல்வியுமே விளையும். அப்படிப்பட்ட விளைவுகளுக்கு இடங் கொடுப்பது சிறிதும் புத்திசாலித்தனமாகாது.

எந்தச் சமயத்தில்

"அடக்குமுறைச் சட்டங்களால் காங்கிரஸ் ஸ்தாபனம் பாரிசம் பிடித்துக் கிடந்தது; ராஜீய வேலைகளே ஒன்றும் நடக்கவில்லை. இப்படிப்பட்ட சமயத்தில்தான் சுயராஜ்யக் கட்சி, புதுப்பிக்கப்பட் டிருக்கிறது. சட்டமறுப்பை நிறுத்த மகாத்மா காந்தி யோசனை கூறினர்; அதனால் காங்கிரஸ் ஸ்தாபனத்தைப் புதுப்பிக்கலாமென்ற நம்பிக்கை பிறந்திருக்கிறது.

கராச்சித் திட்டம்

"காங்கிரசின் கராச்சித் தீர்மானப் படிதான் இன்று நடக்கப் போகிறோம். கராச்சித் தீர்மானத்தை இன்னும் நல்ல சமயத்தில் விரிவு படுத்த, பொதுவுடைமைக் கட்சியார் நன்றாய் உழைக்கலாம். அதற்காக, சுயராஜ்யக் கட்சியின் தேர்தல் முயற்சியைச் சீரழிக்கும் முறையில் நடக்கலாகாது. இன்று காங்கிரஸ் பதினைந்து லட்சம் ஓட்டர்களிடம் விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டியதா யிருக்கிறது. அவர்கள் நடுத்தர வகுப்பார். இந்தச் சமயத்தில், பிரச்சினைகளைக் குழப்பிக் கொண்டிருப்பது அசட்டுத்தனமாகும்.

நோக்கம் என்ன ?

"தேசத்துக்கு வேண்டிய அரசியலமைப்பைத் தயாரிக்கத் தேர்தல்

மூலம் ஒரு பிரதிநிதி சபையை ஸ்தாபிக்க வேண்டும்; சர்க்காரின் வெள்ளை அறிக்கையை நிராகரிக்க வேண்டும்; அடக்குமுறையைக் கண்டிக்க வேண்டும். இவற்றிற்குச் சாதகமாக, தேசத்தின் தீர்ப்பைப் பெறவேண்டும் என்பதுதான் இப்பொழுது சுயராஜ்யக் கட்சியின் நோக்கம். பொது உடைமைக் கட்சியார் மனத்தில் வைத்துக் கொண்டிருக்கும் பிரச்சினைகளை எழுப்புவதற்குச் சாதகமான ஒரு காலம் வரும் என்பதில் சந்தேகமில்லை. அப்பொழுது இன்னும் அதிகமான ஓட்டர்களிடம் வேண்டுகோள் செய்யக்கூடிய நிலைமையில் இருப்போம். இப்போதோ அதிகார வர்க்கத்தின் எதேச்சாதிகாரக் கோட்டையை முற்றுகை யிட்டுத் தகர்க்கும் ஒரே காரியத்திலேயே நாம் ஈடுபட வேண்டும்."

கடிக்கவும் கடிக்கும்

புதிய டில்லிக் கருகில் நடந்த ஒரு கூட்டத்தில் டாக்டர் அன்சாரி பேசியதன் சாரமாவது:—

"குலைக்கும் நாய் ஒரே ஒன்றுகூட இந்தியாவில் கிடையாதென்று இந்தியா மந்திரி ஸர் சாமுயேல் ஹோர் கூறினர். குலைக்கும் நாய் மாத்திரமல்ல, சர்க்காரின் அடக்குமுறையைக் கடிக்கும் நாயும் இருக்கிறது என்பதை அந்த ஸாமுயேலுக்கு நாம் காட்டவேண்டும். நான் இன்னும் மாறுதல் வேண்டாத கட்சியைச் சேர்ந்தவன்தான். நான் இந்தியச் சட்ட சபைத் தேர்தலுக்கு ஒரு அபேட்சகனாய் நிற்கப் போவதில்லை. ஆனால், தேசத்தின் தற்போதைய நிலைமையைப் பார்க்கும்போது, இந்தியச் சட்ட சபையைக் கைப்பற்றிவிட வேண்டுமென்று நான் நினைக்கிறேன்.

கொடியைத் தாழ்த்தோம்

"சுயராஜ்யக் கட்சியார் தேசத்தை விற்கப் போவதில்லை; காங்கிரஸ் கொடியை அவர்கள் தாழ்த்தப் போவதுமில்லை. இப்போதுங்கூடத் தான் என்ன, சட்டசபைக்குள் நுழைந்து விடுவதால் சுயராஜ்யம் கிடைத்துவிடும் என்று நான் நினைக்கவில்லை. என்றாலும், காங்கிரசுக்குத் தான் தேசம் ஆதரவு காட்டுகிறதென்றும் தேசத்தின் விருப்பப்படியே காங்கிரஸ் அலுவல் புரிகிறதென்றும் நிரூபிக்க வேண்டுமென்பதே எனது விருப்பம்."

புகை ஒளியாமோ?

(ராஜாஜி)

[ஸ்ரீமான் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் புலாந்துஷார் என்னுமிடத்தில் செய்த பிரசங்கத்தின் சில முக்கியமான பகுதிகள்.]

இருளும் ஒளியும் ஒன்றுக்கொன்று எவ்வளவு முரணாயிருக்கின்றன; இதே போலத்தான், வேற்றுமைக் கொடுமைகளுக்கும் ஹிந்து தர்மத்துக்கும் உள்ள பொருத்தமும். ஒளி செய்யும் தீபச் சுடர் புகையைக் கக்குகின்றது; இதைப் போலவே ஹிந்து தர்மமும் தீண்டாமை என்ற மாசைக் கக்குகின்றது. ஆனால் புகையே ஒளியென்று நாம் மயங்கிவிடலாகாது; தீண்டாமையே ஹிந்துதர்மம் என்று நினைத்துவிடவும் கூடாது. நாம் இன்னும் தீண்டாமையைக் கட்டியணைத்துக் கொண்டேயிருந்தோமானால், ஹிந்து மதம் உலகத்தால் இகழ்ந்து வெறுக்கப்படும்; இறுதியில் ஹிந்துமதம் அழிந்தே போய்விடும்.

* * *

நமது முன்னோர்களான பெரியார்கள், அருமையான சாஸ்திரங்களை நமக்குத் தந்திருக்கிறார்கள். ஆனால், கடவுள் நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறார்; அந்த புத்தியையும் நாம் உபயோகப்படுத்த வேண்டும். புத்தியை நாம் உபயோகப் படுத்தாவிட்டால், நாம் சாஸ்திரங்களுக்கே விரோதமாக நடப்பவர்களாவோம். இந்தச் சீர்திருத்தத்தை நாம் காலகரணம் செய்து கொண்டிருப்பதன் காரணமென்ன வென்று நினைக்கிறீர்கள்? அச்சம், கடவுளிடம் அவநம்பிக்கை இந்த இரண்டையும் தவிர வேறு காரணமேயில்லை.

* * *

ஒரு ஹரிஜனைத் தொட்டுவிட்டால் கடவுளுக்குக் கோபம் வந்துவிடும் என்று, சில வைதிக ஸ்திரீகளும் புருஷர்களும் தாங்களாகக் கற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படி நினைப்பதே தவறு; இப்படி நினைப்பது கடவுளையே அவதூறு கூறுவதற்குச் சமமாகும். கடவுள் ஒரு அரக்கனல்ல; கடவுள் உங்கள் கண்ணில் பட்ட எந்த மனிதரையும் விடப் பேரருள் வாய்ந்த பரமாத்மா. நீங்கள் மகாத்மாஜீயைப் பின்பற்றி, ஹரிஜனங்களிடம் அன்பாய் நடந்துகொள்ளுங்கள்; அவர்களுக்குக் குடிக்கத் தண்ணீர் கொடுங்கள்; அவர்களைச் சகோதரர் போலவும் சகோதரிகள் போலவும் நடத்துங்கள். கடவுள் மிகவும் சந்தோஷமே அடைவார், கோபங் கொள்ளமாட்டார்.

* * *

சமூக விஷயத்திலும், சமய விஷயத்திலும் சமத்துவம் கொடுக்காமல், பொருளாதார விஷயத்தில் மாத்திரம் ஹரிஜனங்களை உயர்த்த முயற்சிப்பதால் பயன் இல்லை. சமூக சமய சமத்துவங்கள் கொடுக்காமல் கல்வியைக் கொடுப்பதால்தான் என்ன பயன்? கல்வி பெற்றுக் கண் திறந்தவுடனே, தங்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் தாழ்மையைக் கண்டு ஹரிஜனங்கள் உங்களுக்கு விரோதமாய்க் குமுறி எழுந்துவிடுவார்கள். நயமான வேண்டுகோளுக்கு இப்பொழுது இணங்காத நீங்கள், அப்போது பலாத்கார நிர்ப்பந்தத்துக்கு இணங்கித் தீரவேண்டி வரும். பகைமைக்கும் பலவந்தத்துக்கும் உட்படாமல், நயமாய் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள உங்களுக்கு விருப்பமில்லையா? விருப்பமானல், இந்தக் கணத்திலே, முதன் முதலாக, ஹரிஜனங்களுக்குச் சமூக விஷயத்திலும் சமய விஷயத்திலும் சமத்துவம் கொடுத்துவிட வேண்டும்.

நந்தனர் கீர்த்தனைச் சுருக்கம்

(தொகுத்தவர்: சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்)

விலை அணா 2.

கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனர் சரித்திரக் கீர்த்தனைகளில் முக்கியமான பலவற்றையும் ராஜாஜீ பொறுக்கித் தொகுத்திருக்கிறார். மாஜி ஹைகோர்ட் ஜட்ஜி வி. பாஷ்யம் அய்யங்காரின் கோர்த்தியான முகவுரையுடன் கூடியது. சுத்தமான பதிப்பு. டெம்மி 1×8 அளவில் 50 பக்கங்கள்.

சத்திய சோதனை

முதல் பாகம் ரூ. 1-8.

இரண்டாம் பாகம் ரூ. 2.

மகாத்மா காந்தி

தம் சுயசரிதத்தை இதில் சொல்லியிருக்கிறார்.

சுதந்திரச் சங்கு காரியாலயம், 8-c, பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

"Swathanthara Sangu"

A high class popular Tamil weekly.

Price one anna a copy.

Annual subscription :

Inland Rs. 4. **Foreign Rs. 6.**

ADVERTISEMENT TARIFF

	Per Insertion.		
Advertisement rates per Page	Rs. 40	0	0
" Half Page	Rs. 20	0	0
" Quarter Page	Rs. 10	0	0
" per column inch	Rs. 1	8	0

One page is divided into 3 columns of 2¼" × 9"

Cover Pages

2nd & 3rd cover page Rs. 50.

4th cover page Rs. 75.

For contracts of 3 months, 6 months and One year a discount of 5, 10 & 15% respectively will be given over these rates.

Office : 8-c, Pycrofts Road,

TRIPLICANE, MADRAS.

"சுதந்திரச் சங்கு"

ஒரு உயர்தரத் தமிழ் வாரப் பத்திரிகை.

தனிப் பிரதி விலை அணா 1.

வருடச் சந்தா :

உள்நாடு ரூ. 4. வெளிநாடு ரூ. 6.

விளம்பர விகிதங்கள்

ஒரு பக்கத்திற்கு தடவை ஒன்றுக்கு	ரூ.	40	0	0
அரைப் பக்கத்திற்கு " "	ரூ.	20	0	0
கால் பக்கத்திற்கு " "	ரூ.	10	0	0
ஒரு பத்தி ஒரு அங்குலத்துக்கு " "	ரூ.	1	8	0

ஒரு பக்கம் 2¼" x 9" அளவுக்கு 3-பத்திகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அட்டைப் பக்கங்கள்

2-வது, 3-வது பக்கங்களுக்கு ஒரு தடவைக்கு ரூ. 50.

4-வது பக்கத்துக்கு ஒரு தடவைக்கு ரூ. 75.

3-மாதம், 6-மாதம், ஒரு வருஷம் ஒப்பந்தங்களுக்கு, இந்த விகிதங்களிலிருந்து முறையே நூற்றுக்கு 5, 10, 15 வீதம் 'டிஸ்கவுண்ட்' தள்ளிக் கொடுக்கப்படும்.

மானேஜர்,

"சுதந்திரச் சங்கு",

8-c, பைக்ராப்ட்ஸ் ரோடு,

திருவல்லிக்கேணி, சென்னை.

"Swathanthara Sangu Press"

Invites enquiries of all classes of
General & Commercial Printing.

Printers of

"Harijan"

Conducted by Mahatma Gandhi

and

Published under the auspices of
The Servants of Untouchables' Society

Subscription for "Harijan"

Inland Rs. 4 Foreign Rs. 5-8.

8-c, PYCROFTS ROAD, TRIPLICANE, MADRAS.

Edited, Printed and Published by S. Subramanian at the Swathanthara Sangu Press, Triplicane, Madras.